Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 23 சனிக்கிழமை (06.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :160

# நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த

# வருகிறது தேசிய தேசப்பற்றுச் சட்டம்

## ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் ஏற்பாடுகளும் அதில் அடக்கம்

கொழும்பு, மே6

நாட்டின் தேசியப் பாதுகாப்பை வலுப்படுத்தி உறுதிப்படுத்தும் ஏற்பாடுகளை உள்ளடக்கிய விசேட சட்டம் ஒன்றை 'தேசிய தேசப்பற்றுச் சட்டம்' என்ற பெயரில் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் அரசு தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றது.

தேசியப் பாதுகாப்புக்குப் பாதகமான செய்திகளை ஊடகங்கள் வெளியிடுவதைக் கட்டுப்படுத்தும் வகையிலான சரத்துக்களையும் உள்ளடக்கிய இந்தச் சட்டமூலத்தைத் தயாரிக்கும் பணியில் அரச உயர்மட்டத்தினருடன் சேர்ந்து சட்டநிபுணர்கள் சிலர் ஈடுபட்டிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கக்கூடிய வகையிலான பல்வேறு உள்வீட்டு விடயங்களும் பத்திரிகைகளில் வெளிவருவதான குற்றச்சாட்டுக்கள் சிங்கள தேசப்பற்றாளர்கள் எனத் தம்மைக் காட்டிக்கொள்ளும் அமைப்புக்களால் அண்மைக்காலமாக முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. இத்தகைய

(10ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படும் என்கிறது மக்கள்படை

யாழ்ப்பாணம், மே6

குடாநாட்டில் இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படவிருப்பதால் படைநிலைகள், முகாம்களுக்கு அருகில் வசிக்கின்ற மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறு பொங்கியெழும் தமிழீழ மக்கள்படை என்ற அமைப்பு பிரசுரம் மூலம் கோரியுள்ளது.

'பொங்கியெழும் தமிழீழ மக்கள்படை - யாழ். மாவட்டம்' எனக் குறிப்பிட்டு நேற்று உதயனுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

(10ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் பணியாளரின் இறுதிச்சடங்கு இன்று

யாழ்ப்பாணம், மே6

கடந்த செவ்வாய்க்கிழமை 'உதயன்' அலுவலக வளாகத்தினுள் ஆயுதபாணிகளால் படுகொலை செய்யப்பட்ட 'உதயன்' சந்தைப்படுத்தல் முகாமையாளர் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸின் (சுரேஷ்) இறுதிச்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' வாசகர்களுக்கு அன்பான வேண்டுகோள்.....

உங்கள் 'உதயன்' மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலின் பின்னர் உருவாகிய நெருக்கடியான சூழ்நிலை காரணமாக உரிய வேளையில் உதயனை அச்சிட்டு விநியோகிப்பதில் சில இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளோம்.

எனவே, விளம்பரதாரர்களே!

உங்கள் அபிமான உதயனில் நீங்கள் பிரசுரிக்கவிரும்பும் விளம்பரங்களை இயன்றவரை நேரகாலத்துடன் - முதல் நாள் நண்பகலுக்கு முன்பாக - அலுவலகத்தில் சேர்ப்பித்து அவை மறுநாள் பதிப்பில் பிரசுரமாவதை உறுதிசெய்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பக்கங்களின் எண்ணிக்கை தற்காலிகமாகக் குறைக்கப்பட்டிருப்பதாலும் வெவ்வேறு பிரிவுகளின் பணிகளையும் நேரகாலத்துடன் பூர்த்திசெய்யவேண்டியிருப்பதாலும் அடுத்த சில தினங்களுக்கு எங்களோடு ஒத்துழைக்குமாறு விளம்பரதாரர்களிடமும் வாசகர்களிடமும் வேண்டிக்கொள்கின்றோம்.

- நிர்வாகத்தினர்.

## குதிரைமலைக் கடலில் புலிகள் படகு மூழ்கடிப்பு

### இப்படிக் கூறுகிறது கடற்படை

கற்பிட்டி, மே6

புத்தளம், கற்பிட்டி குதிரைமலைக் கடற்பரப்பில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் படகு ஒன்று முற்றாக அழிக்கப்பட்டது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

ரோந்தில் ஈடுபட்டிருந்த கடற்படைப் படகுகள் மீது படகுகளில் வந்த விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த முயன்றதை அடுத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

"இரண்டு படகுகளில் வந்த விடுதலைப் புலிகள் கடற்படைப் படகுகள் மீது தாக்குதலை நடத்தினர். கடற்படையினரின் பதில் தாக்குதலில் புலிகளின் படகொன்று சேதமடைந்தது. மற்றொரு படகு தப்பிச் சென்றது." - என்றார் இராணுவப் பேச்சாளர்.

புலிகளின் தாக்குதலில் கடற்படையின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புறாப்பொறுக்கியில் கிளைமோரில் பொலீஸ் வாகனம் சிக்கி ஒருவர் பலி!

### உடன் சென்ற இருசிப்பாய்கள் காயம்

கரவெட்டி, மே6

வல்லை, புறாப்பொறுக்கிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.35 மணியளவில் பொலீஸ் வாகனம் ஒன்றின்மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் பொலீஸார் ஒருவர் உயிரிழந்தார். இராணுவத்தினர் இருவர் காயமடைந்தனர்.

இராணுவத்தினரின் பாதுகாப்புடன் சென்றுகொண்டிருந்த பொலீஸ் வாகனம் ஒன்றைக் குறிவைத்து கிளைமோர் வெடிக்கவைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

இதேவேளை -

வல்வை சிதம்பரா கல்லூரிக்கு மேற்குப் புறத்தில் நேற்றுப் பிற்பகல் பரவலாக வெடிச் சத்தங்கள் கேட்டன. பின்னர் அந்தப் பகுதியில் போக்குவரத்துக்களைப் படையினர் தடைசெய்தனர் என்று கூறப்படுகின்றது. இந்தப்பகுதியில் படையினர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-70-173)

## மோப்பநாய்கள் சகிதம் நேற்று திருமலையில் பெரும் தேடுதல்

திருகோணமலை, மே 6

திருகோணமலை நகரில் இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து மோப்ப நாய்களின் உதவியுடன் நேற்று பெரும் எடுப்பிலான சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்தினர்.

மோப்ப நாய்களைக் கொண்டு வீடுவீடாகத் தேடுதல் நடத்தப்பட்ட போதும் ஆயுதங்களோ சந்தேகத்திற்கிடமான பொருள்களோ கைப்பற்றப்படவில்லை.

நேற்றைய தேடுதலின் போது பலர் தீவிர

(10ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கொழும்பு வரும் அகாஷி புலிகளைச் சந்திக்கவும் முயற்சி!

கொழும்பு, மே 6

அதிகரித்துவரும் வன்முறைகளின் விளைவாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆராய்வதற்கென இன்று கொழும்பு வந்து சேரவுள்ளார் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி. இந்த விஜயத்தின் போது அவர், வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களுடனும் பேச முயற்சிப்பார்.

தனது விஜயத்தின் ஒரு பகுதியாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்திப்பது பற்றி தூதுவர் அகாஷி ஆராய்வார் என்று கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் நேற்றுத் தெரிவித்தது. இது தொடர்பில் அறிக்கை ஒன்றையும் தூதரகம் வெளியிட்டது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

6ஆம் திகதி கொழும்பு வரும், இலங்கை

(10ஆம் பக்கம் பார்க்க)

## தூதர்களுக்கு தமிழ் எம்.பிக்கள் கடிதம்

யாழ்ப்பாணம், மே6

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ்மக்கள் எதிர்நோக்கும் தற்போதைய நிலை குறித்து இலங்கையில் இயங்கும் வெளிநாடுகளின் தூதர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

இக்கடிதத்தில் வடமராட்சி, புத்தூர் உட்பட வடக்கு - கிழக்கில் தமிழ்மக்கள் கொலை செய்யப்பட்டமை, 'உதயன்' பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டு, ஊழியர்கள் கொல்லப்பட்டமை ஆகிய சம்பவங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். இலங்கை அரசின் இத்தகைய வெறுக்கத்தக்க செயல்களை நிறுத்த தக்க நடவடிக்கை எடுக்குமாறும் தூதர்களிடம் கோரப்பட்டுள்ளது.

## வவுனியாவில் கிரனேட் வீச்சு 3 பொலீஸார் காயம்!

வவுனியா, மே6

வவுனியா, வைரவப்புளியங்குளத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் மூன்று பொலீஸாரும் இரு பொதுமக்களும் படுகாயமடைந்தனர்.

பொலீஸ் ஜீப் ஒன்றின் மீதே கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் இடம்பெற்ற போது வீதியில் நின்றிருந்த இரு பொதுமக்களும் படுகாயமடைந்தனர் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலாளிகள் தவறவிட்டுச்சென்ற துப்பாக்கியை பகுப்பாய்வு செய்யப்பணிப்பு

யாழ்ப்பாணம், மே6

'உதயன் - சஞ்சீவி' வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆயுததாரிகள் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச்சென்ற சமயம் வளாகத்துக்குப் பின்புறமாக - சிவன்கோவிலடிப் பகுதியில் - கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் ரி-56 ரகத் துப்பாக்கியை இரசாயனப் பகுப்பாய்விற்கு உட்படுத்துமாறு யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டிருக்கின்றார்.

குறிப்பிட்ட துப்பாக்கியை இரசாயனப் பகுப்பாய்விற்கு உட்படுத்த உத்தரவிடுமாறு கோரி குற்றப்புலனாய்வுப் பொலீஸார் மனு ஒன்றைத் தாக்கல்செய்ததையடுத்து நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார்.

'உதயன்' அலுவலக வளாகத்திற்குள் தாக்குதல் நடந்த இடங்களில் இருந்து மீட்கப்பட்ட ரவைகள் குறிப்பிட்ட துப்பாக்கியில் இருந்து சுடப்பட்டவையா என்பதையும் -

(10ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் இளைஞனின் சடலம் மீட்பு

அக்கரைப்பற்று, மே6

அக்கரைப்பற்று, திருக்கோவில் பிரதேசத்தில் நேற்றுக்காலை இளைஞர் ஒருவரின் சடலம் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இந்தச் சடலம் தம்பிலுவில் கடற்கரை வீதியில் கண்டுபிடிக்கப்பட்டதாக

(10ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நெல்லியடியில் நேற்றுமுன்தினம் படையினரின் ஆர்.பி.ஜி.தாக்குதலுக்கு இரு ஓட்டோக்கள் இலக்காகின. அவற்றில் பயணித்த பொதுமக்கள் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

இறந்தவர்களின் சடலங்களில் ஓரளவு உருக்குலையாதிருந்த இரு சடலங்களையும் சடலங்களைக் கையளிக்க முன்னதாக பொலீஸார் உறவினர்களிடம் விசாரணை நடத்துவதையும் மேல் வரிசையில் உள்ள படங்களில் காணலாம்.

இறந்தவர்களின் உறவினர்கள் சடலங்களைக் கையேற்பதற்காக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை வளாகத்தில் காத்திருப்பதையும் அங்கு சமுகமளித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தையும் கீழ் வரிசைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

# படையினரின் ஆர்.பி.ஜிக்கு பலியான பொதுமக்களுக்காக நேற்றுத் துக்கம்

கரவெட்டி,மே6

படையினரின் ஆர்.பி.ஜி தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த 7 பொதுமக்களுக்காக கரவெட்டிப் பிரதேசத்தில் நேற்றுத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

நெல்லியடி, நவிண்டிலில் நேற்றுமுன் தினம் இராணுவத்தினரின் ஆர்.பி.ஜி. தாக்குதலுக்கு இரு ஓட்டோக்கள் இலக்காகின. இதில் அவற்றில் பயணித்தவர்களான கரவெட்டி இராஜ கிராமத்தைச் சேர்ந்த பொது மக்கள் ஏழுபேர் கொல்லப்பட்டனர்.

இவர்களின் மரணத்துக்கு துக்கம் தெரிவிக்கும் வகையில் கரவெட்டிப் பிரதேசத்தில் நேற்று வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. பல இடங்களில் சோகத்தைப் பிரதிபலிக்கும் கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. அப்பகுதியில் சனநடமாட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது.

இதற்கிடையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன் தினம் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட சடலங்களின் பிரேத பரிசோதனையை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கே.பாலசுப்பிரமணியம் நேற்றுக் காலை மேற்கொண்டார்.

ஏழு சடலங்களில் இரண்டு மட்டுமே ஓரளவுக்கு முழுமையாக இருந்தன. மற்றைய 5 சடலங்களும் முகப்பகுதி ஓரளவு அடையாளம் தெரியக் கூடியவாறு இருந்த போதும் ஏனைய பகுதிகள் மிக மோசமாக சிதைந்திருந்தன.

பிரதேச பரிசோதனையில் சுடுகலன்களின் தாக்கத்தால் ஏற்பட்ட உடற் சிதைவு காரணமாக மரணம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் நேற்று நண்பகல் 12.15 மணியளவில் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இறந்தவர்களில் வே.நிர்மலனின் சடலத்தை அவரின் மனைவி தேவலட்சுமியும் ந.நாவணனின் சடலத்தை அவரின் தந்தை நவரத்தினசாமியும் சு.சுபாஸ்கரனின் சடலத்தை அவரின் தந்தை சுப்பிரமணியமும் செ.சுமனின் சடலத்தை அவரின் மனைவி புஸ்பராணி யும் பா.கிரிகாந்தனின் சடலத்தை அவரது தாயார் யோகேஸ்வரியும் நா.நகுலேஸ்வரனின் சடலத்தை அவரது மனைவி தாட்சாயினியும் தா.சைமனின் சடலத்தை தந்தை தாமோதரம்பிள்ளையும் பொறுப்பேற்றனர்.

சடலங்களை எரிக்கக்கூடாதென்றும் புதைக்க வேண்டும் என்றும் புதைக்கப்பட்ட இடத்தின் மேல் கல்லறை கட்ட வேண்டாம் எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்களில் 5 பேர் பருத்தித்துறை துறைமுக ஊழியர்கள் ஆவர் இருவர் மினிபஸ் நடத்துநர்கள் ஆவர்.

சடலங்கள் உறவினர்களிடம் கையளித்த போது யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நேரில் சமுகமளித்திருந்தார். (70-173)

## மிதிவெடி அகற்றும் பணி தாமதம்

யாழ்ப்பாணம்,மே6

அசாதாரண சூழ்நிலை காரணமாக மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடி அகற்றும் அலுவலகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எமது ஊழியர்கள் பணிக்குச்செல்லும் போது பல இடங்களில் அடுத்தடுத்து சோதனை நடவடிக்கைகளை எதிர்நோக்குகின்றனர்.

குறித்த இடத்திற்கு அவர்கள் காலதாமதமாகவே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் எமது ஊழியர்களால் திட்டமிட்டபடி பணியாற்ற முடியாதுள்ளது.

இவ்வாறு எமது ஊழியர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் சோதனைக்கெடுபிடிகளை குறைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் பேச முயற்சிக்கின்றோம்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆண்டுவிழா

கைதடி,மே6

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 47ஆவது ஆண்டு நிறைவுவிழா நேற்று எளிமையாக இடம்பெற்றது.

நிலையத் தலைவர் சி.கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொங்கல் வழிபாடு உட்பட அமைதி நிகழ்வுகள் மட்டுமே போர்ச்சூழலை முன்னிட்டு நடைபெற்றன.

(75)

## செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே6

நெல்லியடி ஆசிரிய நிலையத்தில் நேற்று முதல் மூன்று தினங்கள் நடைபெறவிருந்த நூலக ஆசிரியர்களுக்கும் நூலகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களுக்குமான செயலமர்வு தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. செயலமர்வு நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# புதிய சம்பளத்திட்டம் நடைமுறைக்கு 4 மாத நிலுவை இம்மாத சம்பளத்துடன்

அரச ஊழியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதன்படி இணைந்த முகாமைத்துவ சேவை முதலாந் தரத்திற்கான சம்பளம் 16ஆயிரத்து 590 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மாதாந்தம் ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுப்படி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2006 ஜனவரி முதலாம்திகதி முதல் இப் புதிய சம்பளத்திட்டம் நடைமுறைக்கு வருகிறது. இம்மாத சம்பளத்துடன் கடந்த 4 மாதங்களுக்கான சம்பள அதிகரிப்பு நிலுவை வழங்கப்படவுள்ளதாகப் பொதுநிர்வாக அமைச்சின் ஸ்தாபகப் பணிப்பாளர் தர்மதாச தெரிவித்தார்.

புதிய சம்பளத்திட்டம் தொடர்பான 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை நடைமுறைக்கு வருகிறது. அதே வேளை, 12.01.2006, 06.02.2006 ஆகிய சுற்றறிக்கைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன. புதிய சுற்றறிக்கை திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது. அச்சுற்றறிக்கை அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மாகாண சபைகளின் செயலாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சகல அரச ஊழியர்களும் இவ்வருடத்தின் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து மாதமொன்றுக்கு வாழ்க்கைச் செலவுப்படியாக ஆயிரம் ரூபாவினைப் பெற்றுக்கொள்கின்றனர். ஜூன் மாதம் 30 ஆம் திகதியிலும் டிசம்பர் 31 ஆம் திகதியிலும் முடிவடைகின்ற ஆறுமாத காலப்பகுதியின் இறுதியில் ஓர் அலகுக்கு ரூபா 2.50 அடிப்படையில் மீள் கணிப்பீடு செய்யப்படவுள்ளது. புதிய சம்பளப்படி நிலைகளின்படி அரச முகாமைத்துவ இணைந்த சேவையின் முதலாம் வகுப்பிற்கு 16 ஆயிரத்து 590 ரூபாவும் இரண்டாம் வகுப்பிற்கு 14ஆயிரத்து 980 ரூபாவும் மூன்றாம் வகுப்பிற்கு 13ஆயிரத்து 640 ரூபாவும் சம்பள அதிகரிப்பாக வழங்கப்படுகின்றது.

இதன்படி அடுத்த பதவி உயர்வு திகதி வரை சம்பள ஏற்றத் திகதி மாறாது உள்ளதுடன் மீளமைக்கப்பட்ட இணைந்த படிக்கமைய ஆரம்பத் தரத்திற்கு 350 ரூபாவும் இரண்டாம் நிலைத் தரத்திற்கு 400 ரூபாவும் பதவி நிலைத் தரங்களுக்கு 500 ரூபா எனவும் இக் கொடுப்பனவு மீளமைக்கப்பட்டுள்ளது.(11)

# படுகொலைகள் நிறுத்தப்படும்வரை பள்ளிகள், அலுவலகங்களை மூடுங்கள்!

யாழ்ப்பாணம்,மே6

அரசும் அதன் ஆக்கிரமிப்புப் படைகளும் அநியாயப் படுகொலைகளை நிறுத்தும்வரை பாடசாலைகள், அரச அலுவலகங்களின் செயற்பாடுகளை இடைநிறுத்தி எதிர்ப்பை வெளிக்காட்ட ஒத்துழைப்பு வழங்குங்கள்.

- இவ்வாறு ஓர் அறிக்கையில் கேட்டிருக்கிறது தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிங்கள இராணுவத்தின் படுகொலைகள் குடாநாட்டில் தொடர்ந்தவண்ணம் உள்ளன. திறந்தவெளி வன்முறை முகாமாக ஆயுதம் தாங்கிய சிங்களப் படைகளால் எமது குடாநாடு சுடுகாடாக மாறிவருகின்றது.

புத்தூரில் இளைஞர்களை கொலைசெய்து விட்டு இனந்தெரியாதோர் செய்தார்களெனக் கூறிய இராணுவம் உதயனில் பணியாளர்களைப் படுகொலை செய்துவிட்டு இரவில் இனந்தெரியாதோர் செய்தார்களெனக் கூறிய இராணுவம் நவிண்டில் பகுதியில் எமது உறவுகளைப் படுகொலை செய்துவிட்டு குண்டெறியவந்தார்கள் என்று கூறிக்கொண்டு தன்படுகொலைகளை அப்பாவிப் பொதுமக்கள் மீது நிகழ்த்தி வருகின்றது.

அப்பாவிப் பொதுமக்கள் அழிக்கப்படுவது தொடர்கதையாகிவிட்ட நிலையில், தமிழ்மக்கள் தமது எதிர்காலத்தினை எண்ணி ஏங்கிக்கொண்டு இருக்கின்றார்கள். சிங்களப் படைகளின் அராஜகங்களில் இருந்து தமிழ்மக்களை விடுவிக்க எவரும் முன்வராத நிலையில், தமிழ்மக்கள் தாங்கொணா துயரினை அனுபவித்து வருகின்றார்கள்.

பேச்சு, பேச்சு என்று ஒருபுறம் நாடகம் ஆடிக்கொண்டிருக்கும் சிங்கள அரசு, தமிழ் மாவட்டங்களில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தீவிரப்படுத்தியுள்ளது.

சர்வதேச அரசுகள் அரசின் இந்தப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த முன்வராததும் எமக்கு வேதனையளிக்கின்றது.

இராணுவப் பயங்கரவாதம் எங்கள் மண்ணை விட்டு அகலும்வரையில் தமிழ் மக்கள் எள்ளளவும் நிம்மதியடையப் பேவதில்லை. இந்த அநியாயமான படுகொலைகளை அரசும் அதன் ஆக்கிரமிப்புப் படைகளும் நிறுத்தும் வரையில், பாடசாலைகள், அரச திணைக்களங்கள் அனைத்தும் செயற்பாடுகளை இடைநிறுத்தி எமது எதிர்ப்பினை வெளிக்காட்ட ஒத்துழைப்பு நல்குமாறு தமிழ்மக்களை அன்புடன் [illegible]

- என்று தெரிவிக்கப்[illegible]

# இலங்கை சட்டக் கல்லூரியில் புதிய மாணவர்கள் அனுமதி

சாய்ந்தமருது,மே6

இலங்கை சட்டக் கல்லூரியின் 2007ஆம் கல்வி ஆண்டிற்கென புதிய மாணவர்களை அனுமதிப்பதற்காக விண்ணப்பங்களை இலங்கை சட்டக்கல்லூரி நிர்வாகம் கோரியுள்ளது.ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின்கீழ் 2000ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்திடைந்திருப்பதுடன், சாதாரணப் பரீட்சையில் ஆங்கில மொழியிலும், சிங்கள [illegible] சித்திபெற்றிருப்போர் [illegible]ப்பிக்க முடியும்.

சட்டக்கல்லூரியில் இருந்து பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவங்கள் மூலம் இம் மாதம் 31ஆம் திகதிவரை விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அதிபர் இலங்கை சட்டக்கல்லூரி, இல. 244, புதுக்கடைத் தெரு, கொழும்பு - 12 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான நுழைவுப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

(த-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# பேயரசு செய்தால்....!

'பேயரசு செய்தால், பிணந்தின்னும் சாத்திரங்கள்!' - என்று துரியோதனனாதியரைப் பார்த்து பாஞ்சாலி கூறினாளாம் என்றான் மகாகவி பாரதி. இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகத்தில் அத்தகைய ஆட்சி முறைதான் நீடிப்பதாகத் தமிழர்கள் விசனம் கொள்கிறார்கள்.

அட்டூழியக் கொலைகளும், அந்தக் கொலைகளுக்கான சட்ட விலக்களிப்புகளும், அபாண்டக் குற்றச்சாட்டுக்களை கண்மூடித்தனமாக முன்வைத்து உண்மைக் குற்றவாளிகளும் அக்குற்றவாளிகளுக்குப் பொறுப்பானவர்களும் மிக இலகுவாகச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கொள்வதும் தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்பு ஆட்சி வெகு அட்டூழியமாக நடைபெறுகின்றது என்பதை நிரூபிக்கும் சான்றுகள்.

அப்பாவிப் பொதுமக்களைக் கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொல்வதும், "சுட்டார்கள். அதனால் திருப்பிச் சுட்டுக் கொன்றோம்" - என்று இலகுவாகப் பதில் கூறி படுகொலைகளை மூடிமறைத்துத் தப்பிக்கொள்வதும் சர்வசாதாரண நிகழ்வுகளாகிவிட்டதால் 'பிணம் தின்னும் சாஸ்திரங்களே' இன்றைய நியதியாகத் தமிழர் தாயகத்தில் ஆகிவிட்டது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் - ஜனவரி 2ஆம் திகதி- திருகோணமலை நகரத்தில் அப்பாவித் தமிழ் மாணவர்கள் ஐவர் தலைக்கு அருகில் துப்பாக்கியை வைத்துச் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்கள். 'இராணுவத்துக்கு எறிவதற்கு அவர்கள் கொண்டு வந்த வெடிகுண்டு வெடித்து அவர்கள் உயிரிழந்தார்கள்' - என்று படுபொய் கூறி அந்தப் படுகொலைகள் மூடி மறைக்கப்பட்டன. உலகுக்கு உண்மை பகிரங்கமாக வெளிப்பட, சத்தியம் புதைகுழி தோண்டிப் புதைக்கப்பட்டது. கொலைகாரர்கள் அதே துப்பாக்கிகளோடு கைவீசி சுதந்திரமாக உலா வருகின்றார்கள். இந்தப் படுகொலைகளுக்குள் புதைந்து கிடந்த மர்மத்தை, தனது படப்பிடிப்பு மூலம் துலக்கி உண்மையை உலகுக்கு அம்பலப்படுத்திய குற்றத்துக்காக செய்தியாளர் ஒருவரின் உயிர் அங்கு காவுகொள்ளப்பட்டது. அந்தக் கொலைகாரனும் சுதந்திரக் காற்றை சுவாசித்தபடி அடுத்த கொலைக்காக உலாவர அனுமதிக்கப்பட்டிருக்கின்றான்.

அண்மைக்காலத்தில் திருகோணமலை நகரில் ஆரம்பிக்கப்பட்ட இத்தகைய படுகொலைகளும் அவற்றைப் புரிந்த கொலைகாரர்கள், பொய்க்காரணத்தை வெகு 'ஸிம்பிள்' ஆகக் கூறி இலகுவாகத் தப்பிக்கொள்வதும் இப்போது ஆக்கிரமிப்புப் பூமி எங்கும் தீவிரமடையத் தொடங்கியிருக்கின்றன.

யாழ்.நெல்லியடியில் இரண்டு ஓட்டோக்களில் பயணித்துக்கொண்டிருந்த ஏழு அப்பாவித் தமிழ் இளைஞர்கள் காரணமின்றி சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமையும் அதன் பின்னர் அவர்களின் படுகொலைக்கு அரசுத் தரப்பில் முன்வைக்கப்பட்ட நியாயங்களும் உண்மையைக் கேலிக்கூத்தாக்கி சத்தியத்துக்கு சமாதி கட்டி சட்டத்தின் காதில் பூச்சுற்றி, தமிழ் மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாளியாக்கும் நடவடிக்கைகளாகும்.

'உதயன்' அலுவலகம் மீதான கொடூரத் தாக்குதல் குறித்து குற்றப் புலனாய்வுப் பொலீஸார் தமது இரகசிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். நாம் அறிந்த வரையில் தமது ஆரம்ப அவதானிப்புகளை குற்றப் புலனாய்வுத்துறை தமது மேலிடத்துக்கு அனுப்பிவிட்டதாகவும் தெரிகின்றது. அதில் இத்தாக்குதலுக்கு எந்தத் தரப்புக் காரணம் என்பது குறித்து குற்றப்புலனாய்வுத் துறை இன்னும் முடிவுசெய்யவில்லை என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதும் தெரியவருகிறது. புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என்று சந்தேகிப்பதற்கான காரணங்கள் கூட அதில் கூறப்படவில்லை.

ஆனால், புலிகளே 'உதயன்' அலுவலகம் மீதான தாக்குதலை நடத்தினார்கள் என்று பூர்வாங்க விசாரணைகளில் இருந்து தெரியவருவதாகப் பெரிய பிரசாரத்தை முன்னெடுத்திருக்கின்றன அரச ஊடகங்கள். இதன் மூலம் உண்மைக் குற்றவாளிகளைக் காப்பாற்றி, குறுகிய அரசியல் இலாபம் தேடும் கைங்கரியம் தென்னிலங்கையில் அரங்கேறுகின்றது. நீதி, நியாயமான விசாரணைகளை நடத்தி இந்தக் கொடூர குற்றங்களைப் புரிந்த படு பாதகர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான நட வடிக்கைகள் எடுக்கப்படமுன்னரே திசைதிருப்பல்களையும் மழுப்பல்களையும் அரச ஆசீர்வாதம் பெற்ற அதன் ஊடகங்கள் பெரிய எடுப்பில் ஆரம்பித்திருப்பது இந்தக் குற்றப் புலனாய்வு விசாரணைகள் நீதி நிலைநாட்டப்படும் திசையை நோக்கி நகரமாட்டாது என்ற கருத்தை இப்போதே ஏற்படுத்திவிட்டன.

இவ்வகையான கொடூர ஆட்சித்தனம் நீடிக்கும்போது - சட்டத்தைத் தனது கைகளில் எடுத்துத் தனது விருப்பப்படி அதைச் சுற்றி விளையாடும் வகையில் பாதுகாப்புத் துறையின் செயற்பாடுகள் அமைந்திருக்கும்போது - அந்தச் சட்டங்களை மதிக்கும் நிலைப்பாடு தமிழர்களுக்கு எங்ஙனம் ஏற்படும்?

ஆக்கிரமிப்புப் பூமியில் அரச செயற்பாடுகளில் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளும் தமிழர் தரப்பின் மன நிலைக்கு இதுதான் அடிப்படைக் காரணம்.

# எரிபொருளை போதியளவு களஞ்சியப்படுத்தி விநியோகிப்பதாக கூட்டுத்தாபனம் உறுதி

குடாநாட்டில் எரிபொருளை போதியளவு களஞ்சியப்படுத்தி வைத்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலிய மெதகம யாழ். அரச அதிபருக்கு உறுதி அளித்துள்ளார்.

குடாநாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு நிலை குறித்து யாழ். அரச அதிபர் கே.கணேஸ் ஜாலிக மெதகமவுடன் தொலைபேசியில் நேற்று கலந்துரையாடினார்.

பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினைகள் இருக்கின்றபோதும் சாதாரண மக்களின் நலனில் அக்கறை கொண்டு தேவையான அளவு எரிபொருளை அனுப்ப நடவடிக்கை எடுப்பேன் என்று அவர் அரச அதிபரிடம் தெரிவித்தார்.

இதையடுத்து எரிபொருள் பவுஸர்களை அனுப்புவதில் ஏற்படும் தாமதங்களை நீக்குவது குறித்து அரச அதிபர் வன்னி மற்றும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதிகளுடன் தொடர்பு கொண்டு பேசினார்.

முகமாலை, ஓமந்தை சோதனை நிலையங்களில் எரிபொருள் பவுசர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று அரச அதிபர் படைத்தளபதிகளிடம் கோரியுள்ளார். (ஐ)

# 'உதயன்' மீதான தாக்குதல் சம்பவம் பலத்த சந்தேகங்களை கிளப்புகிறது

## அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கூறுகிறார்

கொழும்பு,மே6

"உலக சுதந்திர ஊடகதினம் கொண்டாடப்படுகின்றவேளை 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது பலத்த சந்தேகத்தைக் கிளப்புகிறது. அரசியல் லாபம் கருதியே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றே எண்ணத்தோன்றுகிறது. இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்."

- இவ்வாறு அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போது கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் தெரிவித்ததாவது:-

'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இருவர் கொல்லப்பட்ட சம்பவமானது வன்மையாகக் கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும். அரசு இதை வன்மையாகக் கண்டிக்கிறது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளைக் கைதுசெய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.

உலக சுதந்திர ஊடக தினத்தில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் அரசியல் லாபம் கருதியே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது என எண்ணத் தோன்றுகிறது. இருந்தும் சம்பந்தப்பட்டவர்களை நாம் விரைவில் கைதுசெய்வோம் - என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா இது பற்றிக் கூறுகையில்,

இச்சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்கள் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டனர். எவரும் அடையாளம் காணப்படவில்லை.

இப்போது பொலீஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் சிக்குவர் - என்றார். (க)

# யாழ். ஆஸ்பத்திரியில் மீண்டும் நோயாளரைப் பார்வையிட 'பாஸ்'

யாழ்ப்பாணம், மே6

யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்படும் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு அனுமதி அட்டைகளைக் காண்பிக்கும் நடைமுறை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளர்.

வைத்தியசாலையில் சேர்க்கப்படும் ஒவ்வொரு நோயாளிக்கும் 4 அனுமதி அட்டைகள் வழங்கப்படும். இந்த அட்டைகளில் ஏதாவது ஒன்றைக் காட்டியே நோயாளி தங்கியுள்ள வார்டினுள் நுழையமுடியும் என்றும் -

ஒரு நோயாளரை ஒரே நேரத்தில் நால்வரே பார்வையிட முடியும் எனவும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவுறுத்தி உள்ளார். (ஐ-8)

# நாரந்தனை, தம்பாட்டி பகுதிகளில் நேற்று பெரும் எடுப்பில் தேடுதல்

யாழ்ப்பாணம், மே6

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள நாரந்தனை, தம்பாட்டி பகுதிகள் நேற்றுக் காலை முதல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பலத்த தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன.

கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து இந்தத் தேடுதலை நடத்தினர்.

நேற்று அதிகாலை ஆரம்பமான சுற்றிவளைப்பு, தேடுதல் நண்பகல் வரை தொடர்ந்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

சுற்றிவளைப்பு, தேடுதலை யடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து 777 பாதை ஊடாக ஊர்காவற்றுறை நோக்கிப் பயணித்த வாகனங்கள் அனைத்தும் சரவணைச் சந்தியிலிருந்து புளியங்கூடல் நோக்கி திருப்பிவிடப்பட்டன.

புளியங்கூடல் நோக்கி பயணித்த பஸ்கள் நாரந்தனை தெற்கு, கரம்பொன் ஊடாக ஊர்காவற்றுறை நகரத்தைச் சென்றடைந்தன.

இதேவேளை -

நாரந்தனை, தம் பாட்டி பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் 35 இற்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டு தம்பாட்டி கடற்கரையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் கைதுதொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டது.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டனரா இல்லையா என்பதனை இந்தச் செய்தி அச்சாகும் வரையில் அறிந்துகொள்ள முடியவில்லை. (16)

# ஆனைக்கோட்டையில் வீடமைப்புக்கு 134 குடும்பங்கள் தெரிவு

நவாலி,மே.6

ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் உலக வங்கியின் நிதியுதவியுடன் நிறுவப்படவுள்ள வீடமைப்புப் பணிகளுக்கென 134 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில் 32 குடும்பங்களும், முள்ளி கிராமத்தில் 22 குடும்பங்களும் மூன்றாம் கட்டையில் 8 குடும்பங்களுமே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

வீடமைப்புக்குத் தெரிவானவர்களின் பெயர் விவரங்களடங்கிய பட்டியல் அவ்வப் பகுதிகளில் உள்ள பொது இடங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்றும் -

பட்டியலில் பொய்யான தகவல்களைக் கொடுத்து சிபார்சு செய்யப்பட்டவர்களினது பெயர் விவரம் இடம் பெற்றிருந்தால் அவர்கள் பற்றிய முழு விவரங்களையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு உடன் எழுத்து மூலம் அறிவிக்குமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (100)

# கொழும்பில் சடலம் மீட்பு!

கொழும்பு,மே6

கொழும்பு, பஞ்சிகாவத்தைப் பகுதியிலுள்ள கட்டடப் பொருள்கள் கூட்டுத் தாபனமருகில் உள்ள கால்வாய் ஒன்றி லிருந்து சடலமொன்றைக் கொட்டாஞ்சேனைப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பகல் கொட்டாஞ்சேனைப் பொலீஸாருக்கு மக்கள் கொடுத்த தகவலை அடுத்தே சடலம் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சடலம் இன்னும் இனங் காணப்படவில்லை என பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனைப் பொலீஸார் மேற்கொண்டுவருகின்றனர். (க)

# ஆலய உற்சவத்தில் அதிர்வெடி அச்சத்தால் மக்கள் இடம்பெயர்வு

கரவெட்டி, மே.6

ஆலய உற்சவத்தின் போது கொளுத்தப்பட்ட அதிர்வெடிகளின் சத்தத்தால் மக்கள் அச்சமடைந்து இடம்பெயர்ந்தனர்.

வடமராட்சியில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

எள்ளங்குளம் நாச்சிமார் ஆலய உற்சவத்தின் போது அதிர்வெடிகள் கொளுத்தப்பட்டன. அயல்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அச்சத்தங்களை துப்பாக்கி மற்றும் ஷெல் குண்டுகளின் வேட்டுச் சத்தம் என்று நினைத்தனர்.

இதனால், யுத்தம் மூண்டுள்ளதாக அச்சமடைந்த அவர்கள் இருப்பிடங்களை விட்டுப் பாதுகாப்பான இடம் தேடி ஓடினார்கள்.பல மணித்தியாலங்களின் பின்னர் அதிர்வெடிச் சத்தமே அது என்று அவர்கள் உணர்ந்தனர். அதன் பின்னரே மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.

குடாநாட்டில் தற்போது நிலவும் அச்சச் சூழ்நிலையின் போது இது போன்ற அதிர்வெடிகள் அவசியம்தானா என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பினர். (70)

## நாளை

சித்திரை : 24
ஞாயிற்றுக்கிழமை
07.05.2006
திதி : தசமி
முழுவதும்
நட்சத்திரம் : மகம்
முற்பகல் : 10.01
சுபநேரம் : 08.55 - 10.25
ராகுகாலம் : 4.25 - 05.55

## உதயவாக்கு

மூடர்களின் பணம் பெருகும் போது கர்வம், அகங்காரம் போன்ற சுழல்களில் சிக்கிக்கொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்களை அழிப்பதாலோ உடமைகளைச் சிதைப்பதாலோ பேனாவுக்குள்ள ஆத்ம வலுவைச் சிதைத்துவிட முடியாது!

## உதயன் படுகொலைகளுக்கு 'கூத்தரங்கம்' இதழ் கண்டனம்

யாழ்ப்பாணம், மே6

பத்திரிகை உலகின் உயிர்களை அழிப்பதாலோ உடமைகளைச் சேதமாக்குவதாலோ பேனாவுக்குள்ள 'ஆத்ம வலு'வைச் சிதைத்துவிட இயலாது. 18 ஆண்டுகளாக - நெருக்கடியான காலகட்டத்தில் நிலைத்திருக்கின்ற பத்திரிகையின் மனத் தைரியத்தைச் சிதைத்துவிடவேண்டும் என்பதே தாக்குதலாளிகளின் நோக்கம்.

- இவ்வாறு தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'கூத்தரங்கம்' செய்தி இதழ். உதயன் பத்திரிகை அலுவலகம் மீதான தாக்குதலையும் ஊழியர்கள் மீதான தாக்குதலையும் ஊழியர்கள் படுகொலைகளையும் வன்மையாகக் கண்டித்திருக்கும் அந்த இதழ் மேலும் தெரிவித்துள்ளதாவது -

தேச அபிவிருத்திச் செயல்திட்டத்தின் ஆக்கபூர்வமான செயல் இயக்கத்திற்கு ஊடகங்களின் பணி முக்கியமானது. மக்கள் தமக்குள் தொடர்புகொள்வதற்கும் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் ஊடகங்கள் அவசியமாகின்றன. அதிகார வர்க்கத்திடமிருந்து தமது உரிமையையும் தேவையையும் பெற்றுக்கொள்வதற்கும் நிறைவேற்றிக்கொள்வதற்கும் கூட ஊடகங்கள் பெரிதும் உதவுகின்றன.

ஒரு போர் நெருக்கடிக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகம் தனக்குள் தொடர்பு கொண்டு அணி திரள்வதற்கும் ஆக்க பூர்வமான முன்னெடுப்புகளுக்கும் துணை நின்ற உதயன் பத்திரிகையின் தார்மீகத் துணிவு குடாநாட்டு மக்களுக்கான தெம்பாக, ஊக்கமாக இருந்திருக்கிறது என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது. பத்திரிகைகளுக்கு ஒரு வகையான தொடர்பு உத்தி உண்டு என்று வரையறுக்கிறார்கள். ஆனால் உதயன் எனும் பிரதேசப் பத்திரிகை அதனையும் தாண்டி ஓர் உணர்வுநிலைப் புரிதலை மக்களிடையே ஏற்படுத்தியிருந்தது. அந்தத் தொடர்பாடல் திறன் குடாநாட்டு மக்களுக்கும் உதயனுக்குமான புரியா மொழித் தொடர்பு. இதனால்தான் குடாநாட்டை வழிப்படுத்துகின்ற பணியை உதயனால் செய்ய முடிந்தது. அத்தோடு மக்களால் சிலதைச் சாதிக்கவும் முன்னெடுத்துச் செல்லவும் முடிந்தது.

ஏனைய பிரதேசங்களில் இல்லாத தனிச் சிறப்பு யாழ். குடாநாட்டுக்கு உண்டு. அதுவே பிரதேசப் பத்திரிகைகளின் வளர்ச்சி. அதன் வழி வாசகர்களின் வளர்ச்சி. இந்த நற் பண்பை நாட்டின் ஏனையபிரதேசங்களில் காண முடியவில்லை. இந்தப் பத்திரிகை பண்பாடு ஒடுக்குமுறையாளர்களின் கண்களை உறுத்துவது ஆச்சரியமான ஒன்றல்ல. ஆரோக்கியமான சமூக விடுதலைக்கு 'பத் திரிகைப் பண்பாடு' முக்கியமாகின்றது. அதுவும் விடுதலை வேண்டி நிற்கும் சமூகத்தின் பத்திரிகைப் பண்பாடு வளர்ச்சியும் நிலைபேறும் முக்கியமானதும் நிண்டு நிலைப்பதுமான ஒன்று. இதனைக் கருவறுப்பது ஒடுக்குமுறையாளர்களின் வழிமுறையாக இருந்திருக்கின்றது. இதனை மிக நன்கு திட்டமிட்டு ஒடுக்குமுறையாளர்கள் மேற்கொள்கிறார்கள்.

கடந்த 18 ஆண்டுகளாக நெருக்கடியான காலகட்டத்தில் - நிலைத்திருக்கின்ற - ஒரு பத்திரிகைக்கு இருக்கின்ற 'மனத்தைரியம்' சிதைந்தவிடவேண்டுமென்று விரும்புவதன் வெளிப்பாடுதான் உதயன் பத்திரிகை அலுவலகம் மீதான தாக்குதல்.

பத்திரிகை உலகின் உயிர்களை அழிப்பதனாலோ உடமைகளை சேதமாக்குவதாலோ பேனாவுக்குள்ள 'ஆத்மவலு' சிதைந்துவிடும் என்ற நிலையிருந்தால், எப்போதோ ஊடகங்கள் எல்லாம் செத்திருக்கும். இழப்பின் மீது உயிர் பெற்று வலுப்பெற்றது தான் பத்திரிகைத் தர்மமும் பத்திரிகைத்துறையும். உதயன்தாக்குதல் யாழ்ப்பாணத்தில் உள்ளூர் பத்திரிகைப் பண்பாட்டை மேலும் நம்பிக்கையுள்ளதாயும் வலுவானதாகவும் ஆக்கும் என்பது உறுதி.

கொலைகள் மலிந்தபூமியில் கோரமாய் பலியானவர்களுக்கு எமது அஞ்சலியையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு, செயலுக்காக ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் 'கூத்தரங்கம்' செய்தி இதழ் தெரிவித்துக்கொள்கிறது.

இனிவரும் காலத்தில் இவ்வாறான குரல் வளை நெருக்கும் நடவடிக்கைகள் நடைபெறமால் இருக்க பொதுப்பணியாளர்களும் ஊடகத்துறையினர் மற்றும் மக்கள் அணிதிரண்டு செயற்படுவதோடு, மிக ஆபத்தான பணியை மேற்கொள்கின்ற ஊடகத்துறையினரின் பாதுகாப்புக்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

பத்திரிகைகள் ஒடுங்கி நலிந்ததாக வரலாறு இல்லை. இன்றைய இடர்களே நாளைய வரலாறாகும்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### சின்னத்துரை சீவரத்தினம்

(சமாதான நீதவான், இளைப்பாறிய களஞ்சியக் காப்பாளர் - நீர்ப்பாசனத் திணைக்களம்)

தோற்றம் 06-01-1938 மறைவு 06-04-2006

குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிர்ந்த எங்கள் தந்தையே!
தாயற்ற எங்களுக்கு தாயுமானவர் நீர்!
ஓய்வுற்ற காலம்முதல் உடனிருந்து காத்தவரே!
கடமைகளைக் கலங்காமல் நிறைவாகச் செய்தவரே!
ஒருமாத காலம் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுடனே எந்நாளும் வாழ்ந்திருப்போம்.

புன்னாலைக் கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். (50024)

பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலிகள்

30.04.2006 அன்று காலமாகிய எமது பாடசாலை ஆசிரியை திருமதி வ.அம்பிகைபாலன் அவர்களின் அன்பு மாமி

### திருமதி ஐயம்பெருமாள் தையல்நாயகி

அவர்களினதும் 03.05.2006 அன்று காலமாகிய எமது பாடசாலையின் ஆசிரியை

செல்வி து.காஞ்சனா அவர்களின் பாசமிகு தந்தை

### கந்தையா துரைராஜா

அவர்களினதும் பிரிவுகளால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களுடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(50021)

யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயக் குடும்பம்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 ★ 02 ★ 1935



உதிர்வு 05 ★ 05 ★ 2002

### திருமதி கனகரெத்தினம் தவமணி

திதி : 06 05 2006

நான்கு ஆண்டுகள் சென்றாலும்
அம்மா உங்கள் பிரிவை மறக்கமுடியாது
தினமும் மனக்கண் முன் நின்று
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்!

'சுதா வெதுப்பகம்',
சரவணை கிழக்கு,
வேலணை-9. (50023)

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## சாவகச்சேரி நகரசபை நூலகத்துக்கு நூல்கள்

தென்மராட்சி, மே.06

சாவகச்சேரி நகரசபையின் பொதுநூல் நிலையங்களுக்கு மாணவர்களுக்கான பாட நூல்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

பொதுநூல் நிலையங்களில் தற்போது இல்லாத புத்தகங்களின் விவரங்களை நூலகர்களிடம் வழங்குமாறு மாணவர்களை நகர சபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் கேட்டுள்ளார். (117)

## சமூகசேவை அலுவலர் இடமாற்றம்

தென்மராட்சி, மே.06

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் ஆ.ஞானவேல் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு நெடுந்தீவு பிரதேச செய்லகத்தில் கடமையாற்றிய எஸ்.வரத பாஸ்கரன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மாகாண சமூகசேவைகள் திணைக்களத்தினால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(117)


### வீட்டுக் காவலாளி தேவை

*தனியாக உள்ள வீட்டைப் பராமரிப்பதற்கு வீட்டுக் காவலாளி தேவை.*

தொடர்பு: த.குமாரசாமி அன் சன்ஸ்
248/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

### விற்பனையாளர் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.

தொடர்பு: த.குமாரசாமி அன் சன்ஸ்
248/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருந்தவநேசம் சிறீதரன்

திருமதி அருந்தவநேசம் சிறீதரன் அவர்கள் 03.05.2006 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இளவாலை சிறுவிளான் கனகசபை வித்தியாலய அதிபரும், சமாதான நீதவானும், அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் பொதுச்செயலாளருமான ஆறுமுகம் சிறீதரன் அவர்களின் அன்பு மனைவியும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களான சி.சஜந்திரன், (தரம் 11 சி), சி.ப[illegible]திரன் (தரம் 10 ஏ), சி.சுஜந்திரன் (தரம் 8 ஏ) ஆகியோரின் [illegible]மிகு தாயும், அமரர்களான கதிர்காமு - பறுவதம் தம்பதி[illegible]ரின் மகளும், சின்னத்துரை(கே.கே.எஸ் சிமெந்துத் தொழிற்சாலை ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், கரவெட்டிப் பிரதேச முன்பள்ளித் தலைவர், வடமராட்சிப் பிரதேச முன்பள்ளி உபதலைவர்), பத்மநாதன் (மக்கள் வங்கி சுன்னாகம்), தாமோதரம்பிள்ளை(பிரான்ஸ்) தர்மலிங்கம் (புகையிரதப் பகுதி, பாலாவி), துரைசிங்கம் (ஓவசியர். வவுனியா ஆதார வைத்தியசாலை), அமரர்களான தம்பு நல்லம்மா, செல்லப்பா, சின்னப்பு, அப்பையா, இரத்தினம், அருளானந்தம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், அமரர்களான ஆறுமுகம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், திருமதி தவயோகராகினி குணம், சிறீநகுலன் (கனடா), சிறீவரதராசன் (கனடா), அமரரான சிறீவேந்தன், திருமதி தவமலர் துரைரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2006) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஏழாலை சிவகுரு வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுரு வீதி,
ஏழாலைமேற்கு (50018)

தகவல்,
ஆ.சிறீதரன் (கணவர்).

### கதிராமன் தேவராஜா சுந்தரம்

(ஆங்கில ரியூசன் மாஸ்ரர்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும், பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிராமன் தேவராஜா சுந்திரம் அவர்கள் 04.05.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2006) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொட்டடி மெதடிஸ்மிசன் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல: 02,
2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (50022)

தகவல்,
க.ஜெனரட்ணசிங்கம்
(மருமகன்).

### யோகேஸ்வரன் புஸ்பராணி



தாவடியை வசிப்பிடமாகவும் பிறப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரன் புஸ்பராணி அவர்கள் 04.05.2006 வியாழக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் யோகேஸ்வரனின் அன்பு மனைவியும் ரஜீகரனின் அன்புத் தாயும் துவாரகியின் பாசமிகு மாமியும் றதுர்சனின் பேர்த்தியும் புஸ்பலீலா, சண்முகராசா (அமரர்), சிவராசா (அமரர்), யோகராசா (ஜேர்மனி), புஸ்பரத்தினம், செல்வராசா (இத்தாலி), கதிர்காமநாதன் (இத்தாலி), ஜெயராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேசு, நாகேஸ்வரி சீவரத்தினம் மகாலட்சுமி ஆகியோரின் மைத்தினியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.05.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லொருபதி பிள்ளையார்
கோயிலடி, தாவடி தெற்கு.
கொக்குவில். (50020)

தகவல்:
பொ.யோகேஸ்வரன் (கணவர்),
ரஜீகரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் சூடு தணியவில்லை



குடாநாட்டில் உருவாகிய பதற்றமான சூழ்நிலை நீடிக்கிறது. இராணுவக் கெடுபிடிகள், படையினருக்கு எதிரான தாக்குதல்கள், கொலைகள் என்று சூடு பிடித்த நிலைமை இம்முறை தணியவே இல்லை.

கடந்தமுறை ஜெனீவாவில் பேச்சு நடப்பதற்கு முன்பாக உருவாகிய இதேபோன்ற சூழ்நிலை அரசுத் தரப்பும் புலிகளும் பேச்சு மேசைக்கு வர இணங்கிய கையோடு தணிந்தது; சுமூகநிலை உருவாகியது.

ஜெனீவாப் பேச்சுக்குக்குப் பின்னர் இணக்கம் கண்டபடி சகல வன்செயல்களையும் தடுப்பதற்கு புலிகள் முன்வந்தனர். இதனால், குடாநாட்டில் சுமூக நிலை தோன்றியது.

ஜெனீவாவில் எட்டப்பட்ட இணக்கத்தின்படி அரசு நிலைமையைத் தொடர்ந்து சுமூகமாகப் பேணுவதில் கரிசனை கொள்ளவில்லை. இதனால், நிலைமை மீண்டும் மெல்ல மெல்லத் தடம் புரண்டு இன்று கொந்தளிக்கும் கட்டம்.

இணைத்.தலைமை நாடுகள் அவசரமாகக் கூடி எல்லா வன்செயல்களையும் நிறுத்துங்கள் என்று பகிரங்க வேண்டுகோள் விடுத்த பின்னரும் யாழ்ப்பாணத்தில் 'சூடு' குறையவில்லை. தாக்குதல்கள் நிற்கவில்லை.

பேச்சுத் தொடங்கினால் எல்லாம் நின்றுவிடும் என்று சாதாரண மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், இனி அதற்குச் சாத்தியம் இல்லை என்பதே யதார்த்தம்.

பிரகடனப்படுத்தப்படாத ஒரு போர் இப்போது அரசுக்கு அவசியமாகின்றது. சமாதான உடன்படிக்கையை முறித்துக் கொள்ளாமல் பாதுகாப்பு வியூகங்களை இறுக்கவேண்டிய கட்டாயம் அரசுக்கு.

யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் படையினருக்கு எதிராக இடம்பெற்றுவரும் தாக்குதல்கள், சிறுசிறு சம்பவங்கள் என்றவாறு வெளியே தோன்றினாலும் மொத்தத்தில் இராணுவத்தின் ஸ்திர நிலையை ஆட்டங்காண வைத்துள்ளன என்பது வெளியே தெரியாத உண்மை.

ஆனையிறவு யாருடைய கைகளில் இருக்கிறதோ அவர்களே குடாநாட்டின் கட்டுப்பாட்டைத் தம்வசம் வைத்திருக்க முடியும் என்பது போரியல் களநிலை வல்லுநர்களின் கருத்து. இப்போது ஆனையிறவு புலிகள் வசம். குடாநாட்டில் முகமாலைக்குப் பின்வாங்கிய இராணுவத்தினர் பலாலித் தளத்தைப் பாதுகாப்பதற்கான வியூகத்தின் அடிப்படையிலேயே நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

பலாலிப் பெருந்தளத்தையும் அதனோடு இணைந்த காங்கேசன்துறை துறைமுகத்தையும் பாதுகாப்பது. அதேசமயம் யாழ்.நகரைப் பலாலிப் பெருந்தளத்துடன் இணைக்கும் பலாலி நெடுஞ்சாலையைப் பேணுவது.

வன்னியில் இருந்து புலிகள் முதலில் உள்நுழையக்கூடிய பிரதேசமாக தென்மராட்சியை எதிர்பார்க்கிறது இராணுவம்.

இதன்படி தென்மராட்சி மீதான படையெடுப்பு ஏற்கனவே விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்டது. இப்போதும் கூட இராணுவம் தென்மராட்சியை விசேட கவனிப்புக்குரிய பிரதேசமாகவே வைத்திருக்கின்றது. அங்கு படையினருக்கு எதிராக இடம்பெறும் தாக்குதல்களையும் புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக இராணுவப் புலனாய்வுத்துறை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அவதானித்தால் இது புரியும்.

கிளாலியை மையப்படுத்தி மிருசுவில் வரையான பெரும் படைத் தளப்பிரதேசம் ஒன்றை இராணுவம் பேணுகின்றது. அங்கு பெருந்தொகையான இராணுவத்தினர் வளங்களோடு நிறுத்தப்பட்டிருக்கின்றனர். இந்த முன்னணி அரண் தகர்க்கப்பட்டால் பலாலிப் பெருந்தளம் ஆட்டம் காண்பது உறுதி.

தென்மராட்சியில் புலிகளின் செயற்பாடுகள், தாக்குதல்கள் அதிகரிப்பது குடாநாட்டு இராணுவத் தலைமைக்குச் சவாலாக இருக்கின்றது.

அண்மைய நாள்களில் தென்மராட்சியில் நடந்துவரும் பாதுகாப்புச் சோதனைகள், கொலைகள் என்பன அந்தப் பிரதேசத்தின் மீதான பிடியைத் தளரவிடாமல் வைத்திருக்கின்ற நோக்கம் கொண்டவை.

இதைவிட குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களில் ஆங்காங்கே பரவலாக நிறுத்தப்பட்டிருக்கும் படையினர் ஓயாமல் தாக்கப்படுகின்றனர். சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்தால்கூட சகட்டுமேனிக்கு சுட்டுத்தள்ளி விடுகின்றார் சக சிப்பாய்.

சிறுசிறு கிளைமோர் தாக்குதல்களும் கிரனேட் வீச்சுகளும் தெருக்களில் சிப்பாய்களின் நிம்மதியைத் தொலைத்துவிட்டன.

மக்கள் மத்தியில் நடக்கும் திடீர்த் தாக்குதல்கள் தான் பெரும் தலையிடியானவை.

யாழ்.நகரில் வீதிக்கு வீதி துப்பாக்கிகளின் முனையில்தான் மக்கள் நடமாடவேண்டியுள்ளது.

யாழ். ஆரியகுளம் பகுதியில் கிரனேட் ஒன்று வெடித்தபோது, கலவரமடைந்த சிப்பாய்கள் சுட்டதில் மாணவர்கள் சிலர் காயமடைய நேர்ந்தது.

சைக்கிள் ரியூப் வெடித்த சத்தம் கேட்டு, படையினர் சுட்டுத்தீர்த்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

மக்களோடு நல்லுறவைப் பேணுவதன் மூலம் குடாநாட்டில் நிலையூன்றி நிற்கமுடியும் என்பது படை உயர் அதிகாரிகளின் எண்ணம். இதற்காக களத்தில் உள்ள சிப்பாய்களுக்கு கட்டளைமேல் கட்டளையிட்டாலும் அவர்கள் மக்களைத் திருப்பித் தாக்கி நிலைமையை விபரீதமாக்கிவிடுகிறார்கள்.

'மக்கள் படை' நடத்திவரும் சிறுசிறு தாக்குதல்கள் படையினரை கலவரமடையச் செய்வதால், அவர்களிடையே தற்காப்பு எண்ணம் மட்டுமே மேலோங்கி வருவது படைத் தலைமைக்குச் சிக்கலை ஏற்படுத்துகின்றது.



ஓய்வில்லாத விழிப்பு நிலையை எந்நாளும் பேணுவது என்பது சாத்தியமில்லை. எங்கே தாக்குவார்கள், யார் தாக்குவார்கள் என்பது தெரியாத குழப்பத்தில் வெடிச்சத்தம் கேட்டாலே ஓடாக்குறையாக கலவரமடைந்து செய்வதறியாது நிற்கும் சிப்பாய்களைச் சந்திக்குச் சந்தி நிறுத்திவைத்துக்கொண்டு, பாதுகாப்பைப் பேணமுடியாது.

தங்களின் கடைசிப் புகலிடம் பலாலித் தளம் தான் [illegible] படையினர் மத்தியில் உள்ளது. இத்தகைய மனோநிலையைக் குழப்பும் உளவியல் யுத்தத்தில் புலிகளுக்கே சாதகமாகிவிடுகிறது.

ஏற்கனவே, இந்தப் பத்தியில் குறிப்பிட்டதுபோல கொலைகள் நின்றபாடாய் இல்லை. கடந்தவாரம் யாழ்.நகரட் பகுதியிலும் துப்பாக்கிதாரிகள் நுழைந்து மினிபஸ் நடத்துநரான இளைஞர் ஒருவரைச் சுட்டுக்கொன்றனர்.

இது 'எல்லாளன் படை' என்கின்ற படையின் வேலை. இராணுவத்தினது உளவாளிகளாகச் செயற்படுகின்றவர்களைச் தேசத்துரோகிகள் எனக்கூறிச் சுட்டுத்தள்ளுகிறது எல்லாளன் படை. 'சூடு'கள் குறையவில்லை.

தமிழத் தேசியப் பற்றாளர்கள் பலர் அடுத்தடுத்துச் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர். அண்மைக் காலத்தில் சுட்டுக்கொல்லப்பட்டோரில் சுமார் இருபதுக்கும் மேற்பட்டோர் நாட்டுப் பற்றாளர்கள் என்பதைப் புலிகள் உறுதி செய்கின்றனர். ஆனால், அவர்களை அம்பலப்படுத்துவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் கருதி அவர்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

எங்கே, எத்தனை கொலைகள் என்று கணக் குப் பார்த்தபடிதான் பொழுது விடிகிறது. யாழ்ப்பாணத்தின் வீதிகள் இயல்புநிலையை இழந்து பல நாள்களாயிற்று. அங்காடிகளில் கலகலப்பு இல்லை. தேவைக்கு மட்டும் மக்கள் வீதிக்கு வருவதால் வீதிகள் எப்போதும் வெறிச்சோடி விடுகின்றன.

நாளாந்தம் ஏ-9 வீதி வழியாகவும் விமான மார்க்கத்திலும் பலர் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்போதைய நிலைமை இன்னும் சில நாள்கள் நீடித்தால் மேலும் பலர் இடம்பெயர நேரிடும்.

குடாநாட்டில் இருந்து வன்னியில் புலிகளின் பகுதிக்குச் செல்வதே இப்போதைக்குப் பாதுகாப்பானது என்ற எண்ணம் இளைஞர்களிடையே உருவாகிறது.

ஆனால், புலிகளின் பகுதிகள் மீது கிழக்கில் நடத்தப்பட்டது போன்ற வான் தாக்குதல்கள் வன்னிப் பிரதேசத்தின்மீதும் இடம்பெறலாம் என்ற அச்சமும் மக்கள் மத்தியில் உள்ளது. இதை உறுதிப்படுத்துவது போல தீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படை கடந்த வாரம் வன்னியில் பூநகரி கரையோரப் பிரதேசம் மீது ஷெல் தாக்குதல்களை நடத்தியிருந்தது.

படையினரின் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் தீவகப் பகுதியில் - அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற ஒருகிளைமோர்த் தாக்குதலை அடுத்து அதற்கு மறுத்தானாக மண்டைதீவில் இருந்து பூநகரி நோக்கி ஷெல்கள் வீசப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இனிமேல் படையினர் மீது பெரிய தாக்குதல்கள் ஏதாவது நடப்பின் பதிலுக்குப் புலிகளின் நிர்வாகப் பிரதேசமான வன்னிப் பகுதி மீது இராணுவம் கைவைக்கும் என்பதற்கான முதல் சமிக்ஞையாக இத்தாக்குதலைக் கருதமுடியும்.

1995 ஆம் அண்டு குடாநாட்டை புலிகள் பிடியில் இருந்து இராணுவம் மீட்ட பிறகு செம்மணிப் படுகொலைகள், ஆள்கள் காணாமற்போனமை என்று இராணுவ அட்டூழியங்கள் தலையெடுத்தன. அதன் பெறுபேறு அரசுக்கும் இராணுவத் தலைமைக்கும் அழியாத அபகீர்த்தியை ஏற்படுத்தியது. அதன் பின்னர் மக்களோடு நல்லுறவை ஏற்படுத்தவும் இராணுவத்தைப் பற்றிய கொடூர தோற்றத்தை மாற்றவும் சில படை உயரதிகாரிகளும் தளபதிகளும் முயற்சித்தனர். அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர். ஆனால், இப்போது அந்த முயற்சியை எல்லாம் துடைந்தெறிந்து உலகிலேயே மிகக் கொடூரமான இராணுவம் என்ற முகத்தைப் பெற்றிருக்கிறது இலங்கை இராணுவம்.

புத்தூர் படுகொலைகள், நெல்லியடி படுகொலைகள் என்று அப்பாவி மக்களைக் கொன்று போட்ட இராணுவத்தின் படுபாதகச்செயல்கள் ஆட்சியில் இருப்பது அரசுத் தலைமையா, அரக்கத் தலைமையா என்ற கேள்வியை எழுப்புவதோடு தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு சரியான பாதை எது என்பதையும் தெளிவுபடுத்தி விட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, 1964 பூராட நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற, O/L படித்த, லண்டனில் வேலைசெய்யும் மணமகனுக்கு லண்டன், பிரான்ஸ், ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளில் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.2865, மே/பா உதயன். (49957)

### வாகனங்கள் வாடகைக்கு

கார், வான், மோட்டார் சைக்கிள், என்பன Self Drive வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன், சாரதி அனுமதிப் பரீட்சைக்கான மோட்டார் சைக்கிள், திருமணக் கார் சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:360, பிரதான வீதி (பஸ்ரியன் சந்திக்கு அருகில்), தொ.பே:021 222 9154, 0777593722. (48823)

### சுகாதார சேவைகள் பணிமனைக்கு நடமாடும் ஆய்வுகூடம்

கொழும்பு மத்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கென நடமாடும் ஆய்வுகூடம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்திய நிறுவனங்களில்ஆய்வுகூட வசதிகள் இல்லாத வைத்தியசாலைகளில்விரைவில்பயன்படுத்தப்படும் என யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (8-51)

### உடற்பயிற்சிப் போட்டி

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயத்தில் நடைபெறுமெனஉடற்கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி அறிவித்துள்ளார். (8-190)

## ஹர்த்தாலால் தடைப்பட்ட பல்கலைப் பரீட்சைகள் சனியன்று நடக்கும்

யாழ்ப்பாணம்,மே.06

ஹர்த்தாலால் நேற்றுமுன்தினம் நடைபெறாத யாழ்.பல்கலைக் கழக கலைப்பீட முதலாம், இரண்டாம் வருட அரையாண்டுப் பரீட்சைகளும்-

முகாமைத்துவ, வணிகபீட இரண்டாம் வருட அரையாண்டுப் பரீட்சைகளும்-

இன்று சனிக்கிழமை நடைபெறும் என்று பல்கலைக்கழக உதவிப்பதிவாளர் அறிவித்துள்ளார். (ஐ)

### BIT Bachelor of Information Technology

விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க BIT தெரிவுப் பரீட்சைக்கான விண்ணப்பமுடிவு திகதி 10.05.2006 வரை நீடிக்கப்பட்டுள்ளது

BIT கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS உடன் இணைந்து கணனிப் பட்டதாரியாகும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Director
IIS CITY CAMPUS
\# 200, Sivan Pannai Road, Jaffna
T.P : 021 222 8060

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி ஸ்ரீ.சோபியா

இயற்றாலை,வரணியைச் சேர்ந்த ஸ்ரீ பவான் -வலர்மதி தம்பதியினரின் செல்வப் புதல்வி சோபியா தனது முதலாவது பிறந்த தினத்தை 06.05.06 சனிக்கிழமை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா



பெரியம்மாமார், அத்தைமார் மாமாமார் சித்தப்பாமார் சித்திமார், அன்ரிமார், மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் சோபியாவை சிட்டிபுரம் கண்ணகை அம்மன் அருள்பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றனர்.



வரணி, இயற்றாலை, வரணி. (49750) சித்தப்பா (ஈசன்)

## துயர் பகிர்கின்றோம்

எமது செயலக கிராம உத்தியோகத்தர்களான திரு.சின்னத்துரை பாலசுந்தரம் அவர்களின் தாயாரும் திருமதி இராகினி இராமலிங்கம் அவர்களின் மாமியாருமாகிய

**திருமதி சின்னத்துரை பாக்கியம்**

அவர்கள் காலமான செய்திகேட்டு துயர் அடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உதவிப் பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,பச்சிலைப்பள்ளி. (50008)

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி வெற்றிடம்

பாடசாலை வேலைகள் பகுதியின் ஊடாக சுவிஸ் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை அமைய அடிப்படையில் நியமிப்பதற்கு கீழ்கண்ட தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.தகைமைகள்
- i க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தி
- ii தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா சான்றிதழ்(NDT) குடிசார் (இஆம் வருடம்) அல்லது
- iii தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ்(NCT) குடிசார் (இஆம் வருடம்) அல்லது
- iv தேசிய தொழில்நுட்ப கணிய அளவையில் சான்றிதழ்
- v கட்டட நிர்மாண தொழில்நுட்பச் சான்றிதழ் (BCT) அல்லது
- vi தொழில்நுட்ப சேவையிலுள்ள அனுபவமும் அது சம்பந்தமான தராதரப் பத்திரங்களும்

உ.சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
௩.வடமராட்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

*விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரங்களுடன்(Bio Data) கூடிய விண்ணப்பங்களை பணிப்பாளர்,சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், 521/11, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 2006.05.08 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தொழில் நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.*

## ஆறாத்துயரில் ஒன்பதாம் ஆண்டுகள்



அமரர்
**சபாரத்தினம் கனகசபாபதி**

தோற்றம் 13-10-1946 மறைவு 01-05-1997

திதி:06-05-2006

எம் அன்பின் திருவுருவாய் எம்மை
வாழ வைத்த தெய்வமே! ஒன்பது ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவலைகள்
எம் நெஞ்சைவிட்டகலாது.

இணுவில் தெற்கு,
இணுவில். (50012) அன்பு மனைவி சௌபாக்கியலட்சுமி

## COMPUTER EXPRESS
### Institute of Information Technology

இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

**Diploma in Video Mixing**

Free study pack & Photos CD

வகுப்புக்கள் ஆரம்பம். 08/05/2006

## தேவை

யாழ்.நகரில் பிரபல்யமான வர்த்தக நிலையத்துக்கு கொம்பியூட்டர், தொலைபேசி, போட்டோ பிரதி இயக்குநர் தேவை. அனுபவம் உள்ளவர்கள் முழு ஆவணங்களுடன் கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும்.

விள.இல.2867
(C/49199) மே/பா, உதயன்.

## C.C.A.சுன்னாகம்
### O/L Day Class

ஆரம்பம்: 08.05.2006
8 a.m.
(50014)

## தவறிவிட்டது

வளலாய்மேற்கு, அச்சுவேலி என்ற முகவரியுடைய குமாரசாமி பிரபாகரன் என்பவருடைய தே.அ.அட்டை (803453420V), சாரதி அனுமதிப்பத்திரம்(A013043878AD) என்பன வல்லைச் சந்திக்கும் கோப்பாய் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:கிருபா பார்மஸி
கோப்பாய் பார்மஸி, கோப்பாய்.
(C/49196) T.P.:0777 165007.

## கண்ணீர் அஞ்சலி

பளை கோட்டக் கல்வி அலுவலர் சி.இராமலிங்கம் பளை நகர கிராம அலுவலர் சி.பாலசுந்தரம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் புலோப்பளை மேற்கு கிராம அலுவலர் திருமதி இராகினி இராமலிங்கம் அவர்களின் அன்பு மாமியாருமாகிய

**திருமதி பாக்கியம் சின்னத்துரை**

அவர்கள் 04.05.2006 அன்று அமரத்துவமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, எமது கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள்,
கல்விக்கோட்டம்,.பளை. (C/49200) ஊழியர்கள்.

## அந்தியேட்டி அழைப்பு

கடந்த 28.03.2006 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

தோற்றம் 25 - 07 - 1924



மறைவு 28 - 03 - 2006

அமரர் **கிருஷ்ணபிள்ளை மார்க்கண்டு**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எமது இல்லத்தில் நாளை (07.05.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஜெயமகால் மா.புவனேந்திரன் (மகன்)
அல்வாய் வடக்கு, அல்வாய். (50011) பேரமக்கள்.

## C.C.A.சுன்னாகம்

A/L மாணவருக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

தமிழ்: பத்மநாதன்: 8,9,10 ஆம் திகதியில்
அளவையியல்: சயந்தன் 11, 12 ஆம் திகதியில்
புவியியல்: பாபு 15, 16 ஆம் திகதியில்

குறிப்புகள் வழங்கப்படும்.
(50013)

## 11 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**நாகலிங்கம் பரம்சோதி**

அன்னார் காலம்சென்ற நாகலிங்கம் தம்பதிகளின் அன்புமகனும் றெஜினா கனகம்மாவின் (ஓய்வுபெற்ற தாதி) அன்புக் கணவரும் மனோகரதாஸின் (மருத்துவபீடம் பல்கலை.) தந்தையும் திருமதி சி.மனோகரதாஸின் (யா/மத்திய கல்லூரி) மாமனாரும் தர்மதா, நாமதா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) மிதுன்பரிசித் (யா/மத்திய கல்லூரி), மேருஞன், பரதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

திடீரென 26.04.2006 இல் ஏற்பட்ட மறைவை காலச் சூழ்நிலை காரணமாக சுற்றத்தார், நண்பர்கள் எனப் பலருக்கும் அறிவிக்கமுடியவில்லை. அவரது இழப்பை முன்னிட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் தொடர்புகொண்ட அன்புள்ளங்களிற்கும் மரணச் சடங்கிற்கு உறுதுணை புரிந்த மருமக்கள், பெருமக்கள் பேரப்பிள்ளைகள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலை இவ்வேளையிற் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

பறிஜின் டிசைன் குறூப்
100, அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு. (50001)

மனைவி, மகன்,
மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஊடகவியலாளர்களை காக்க நடவடிக்கை எடுங்கள்!

## ஐ.நா. செயலாளரிடம் கிளிநொச்சி ஊடகவியலாளர்கள் கோரிக்கை

தமிழ் ஊடகவியலாளர்களையும் ஊடகத்துறையையும் பேராபத்து நிலையிலிருந்து பாதுகாக்க ஐ.நா. செயலாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது கிளிநொச்சி ஊடகவியலாளர் மையம். உதயன் பத்திரிகை மீதான தாக்குதலை அடுத்து நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஐ.நா. சபையின் பொதுச் செயலருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்தது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழ் ஊடக அமையத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம் எமது ஊடக செயற்பாட்டு சுதந்திர ஜனநாயக உரிமைக்கு ஏற்பட்டுள்ள அரச பயங்கரவாதத்தின் அடிப்படையிலான பாரிய அச்சுறுத்தல் தொடர்பான கீழ் காணும் விடய்ங்களை தங்களின் மேலானதும் உன்னிப்பானதும், விசுவாசம் மிக்கதுமான கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

ஒரு ஜனநாயக நாட்டின் தரம், அரச நீதியின் தன்மை என்பன அந்த நாட்டின் ஆட்சியாளர் மக்களுக்கு வழங்கும் எழுத்து, பேச்சு மற்றும சிந்தனை சுதந்திரத்தின் அடிப்படையிலேயே மதிப்பீடு செய்யப்படுகின்றது என்பது தங்களுக்கு தெரிந்தவிடயமே.

சிறிலங்காவின் பேரினவாத ஆட்சியாளர்கள் கடந்த சில தசாப்த காலமாகவே இத்தகைய ஜனநாயகப் பண்புகளற்ற தன்மையுடன்தான் இயங்கிவருகின்றார்கள் என்பதையும், இதனடிப்படையில் இந்த நாட்டின் ஊடகவியளார்கள் அதுவும் குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் பன்முகப்பட்ட அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றார்கள் என்பதையும் சர்வதேச ஜனநாயக சமூகம் பாராமுகமாக அலட்சியப்படுத்துவது தான் துயரம் தரும் விடயமாகும்.

தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான சிறிலங்கா அரச ஆயுதபடையினரதும், ஆயுதந்தாங்கிய துணைப்படையினரதும் தொடர்ச்சியானதும் நன்கு திட்டமிட்ட வகையிலானதுமான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் மற்றும் கொடூரமான கொலைகள் இன்று ஓர் உட்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் ஒட்டுமொத்தமாக தமிழ் ஊடகத்துறையே இத்தகைய கலாசாரமற்ற - மந்தபுத்தியுள்ள - படையினரால் இலக்கு வைக்கப்படுகின்றது என்ற அச்சம் மேலோங்கியுள்ளது.

இந்த ஜனநாயகவிரோத மனித அடிப்படை உரிமைமீறல் செயற்பாடுகளுக்கு சிறிலங்காவின் அரச பீடத்தின் ஆசீர்வாதமும் அங்கீகாரமும் இருப்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

அரச தரப்பினர் மறுத்தாலும்கூட இதுவே உண்மையாகும். தமிழ் ஊடகவியலாளர்களை தமிழ் தேசியம் தழுவிய போக்கில் சிந்திக்கும் ஊடகவியலாளர்களை தமது எதிரிகளாக கருதி அவர்களின் ஜனநாயக ரீதியிலான ஊடக செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பேரினவாதிகளின் சிந்தனைக்கு பலியானவர்களின் பட்டியல் நீளமானது என்பதுடன் தொடர்ந்து கொண்டும் வருகின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

கடந்த செவ்வாய்கிழமை (02.05.2006) அன்று மாலை யாழ்ப்பாணம் உதயன் நாளிதழ் அலுவலகத்துள் மாலை ஏழுமணியளவில் அத்துமீறி பின்வழியால் உள்நுழைந்த கறுப்புடையணிந்த ஆயுதபாணிகளான ஐவர், அங்கு இரவுப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்களை ஆயுதமுனையில் அச்சுறுத்திவிட்டு ஆசிரிய பீடத்துள் நுழைந்து தேடுதலை மேற்கொண்டதுடன் அங்கு எவரும் அவர்களிடம் சிக்காததால் அங்கிருந்த கணினிகள் உட்பட சாதனங்களை நிர்மூலம் செய்துவிட்டு கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டுள்ளனர். இவர்களின் இந்த காட்டுமிராண்டித்தனத்திற்கு அங்கு பணிபுரியும் அப்பாவிகளான சந்தைப்படுத்தும் முகாமையாளர் சுரேஸ் என்பவரும் விநியோகப் பகுதியைச் சேர்ந்த ரஞ்சித் என்ற இளைஞரும் பலியாகியதுடன் மேலும் இருவர் படுகாயமும் அடைந்துள்ளனர்.

மறுநாள் (03.05.2006) கொண்டாடப்படவிருந்த சர்வதேச ஊடக சுதந்திரதினத்திற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவும், அவமதிப்பாகவுமே இதனைப் பார்க்கவேண்டியுள்ளது.

இந்த ஆயுதக் குழுவினர் யார் என்ற கேள்விக்குரிய விடையை அந்த நாளிதழின் ஆசிரிய பீடத்தவரே அச்சத்தின் காரணமாக மறைமுகமாகத் கூறியுள்ளார். சம்பவம் நிகழ்ந்த பதினைந்து நிடமிங்களில் அப்பத்திரிகையின் முக்கியஸ்தரோடு தொடர்பு கொண்ட ஜனாதிபதி, நிகழ்வின் முழுப்பரிமாணங்கையும் தெளிவாக விசாரித்து அறிந்து கொள்ளாமல் பொறுப்பற்ற வகையில் மறுநாள் ஊடக சுதந்திர தினத்தில்தான் கலந்து கொண்டு உரையாற்றும் வைபவத்தைக் குழப்பி தனக்கு அபகீர்தியை ஏற்படுத்தும் நோக்குடன் புலிகளே இதனைச் செய்துள்ளனர் என்றுள்ளார்.

ஆனால், இதனைப் புலிகள் செய்யவில்லை என அவரின் கூற்றை நிராகரித்த உதயன் நிர்வாகியிடம் அப்படியானால் அது குறித்து விசாரணை செய்கின்றேன் என சமாளித்தார். அவரின் இந்த பேச்சிலுள்ள அலட்சியம், உண்மையான குற்றவாளிகளைப் பாதுகாக்கும் அவரது மனோபாவத்தை வெளிப்படுத்துவதாகவே உள்ளது என்பதுடன் எந்தப் பழியையும் புலிகள்மீது சுமத்திவிட்டுத் தப்பித்துள்கொள்ள முனைப்புக்காட்டும் அவரது நியாயமற்ற குரூர சிந்தனையையும் வெளிப்படுத்துவதாகவே உள்ளது. இது சமாதானத்திற்காக உழைப்பதாகக் கூறும் ஒரு ஜனாதிபதிக்குரிய பண்பாக இல்லை என்பதே கவலை தரும் விடயமாகும்.

ஏற்கனவே படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசிய உணர்வுடனும் சத்திய வேட்கையுடனும், உண்மைகளை உலகிற்கு அறிவிக்கும் இலட்சியத்துடனும் செயற்பட்ட நிமலராஜன் முதல் சிவராம் (தாரகி), மற்றும் சுகிர்தராஜன் வரையிலான பல ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்தோ ரின் மரண விசாரணைகளை அரசாங்கம் எவ்வாறு கையாண்டது, கையாளுகின்றது என்பதை நாமறிவோம்.

இவற்றிற்குத்தான் சாட்சியங்கள் இல்லை, ஆதாரம் இல்லை என அரசு காரணங்களைக் கூறினாலும், சில மாதங்களுக்கு முன்னர் ஜே.வி.பியினர் கொழும்பில் நடத்திய பேரணியின்போது செய்தி சேகரிக்கச் சென்ற சுடரொளி பத்திரிகையின் செய்தியாளர் யதுர்சன் ஜே.வி.பி. குண்டர்களால் தாக்கப்பட்டமைக்கு ஆதாரமாக ஒளி நாடாக்கள் உட்பட சான்றுகள் இருந்த போதும் அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

இது தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தித் தாக்கி, கொலை செய்வோரை அரசாங்கம் பாதுகாக்க விரும்புகின்றது என்ற செய்தியை உரத்துச் சொல்வதாகவே உள்ளது.

உதயன் பணியாளர்கள் மீதான இந்த படுகொலை தொடர்பான அரசின் விசாரணை என்பதும் இந்த அடிப்படையிலேயே அமையும் என்றே எண்ணவேண்டியுள்ளது.

நன்கு திட்டமிட்டதும், காட்டுமிராண் டித்தனமானதும், ஜனநாயக விரோதத் தன்மை கொண்டதுமான இந்தக் கொலைகள் தமிழ் ஊடகவியலாளர்களை மட்டுமல்ல, தமிழ் ஊடகத்துறையையே நிர்மூலமாக்கும் உள்நோக்குடன் கூடிய அரச பயங்கரவாதத்தின் ஓர் அம்சமாகவே நாம் கருதுகிறோம், அஞ்சுகின்றோம்.

முன்னெப்போதுமில்லாதவாறு இந்த சமாதான காலத்தில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கும், தமிழ் ஊடகத்துறைக்கும் ஏற்பட்டுள்ள இந்த அச்சுறுத்தலானது ஒரு ஜனநாயக நாட்டின் இறைமைக்கு அவமானகரமானது என நீங்கள் கருதவில்லையா?

தமிழ் ஊடகவியலாளர்களையும், ஊடகத்துறையையும் இந்தப் பேராபத்து நிலையிலிருந்து பாதுகாக்கவும், அவர்கள் மீதான ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளும் சிறிலங்கா அரசுக்கும் அதன் ஆயுதத் துணைப்படைகளுக்கும் எதிராக கண்டனம் தெரிவிக்கவும், ஜனநாயகத்தின் பெயராலும், சமாதானத்தின் பெயராலும் உங்களுக்கும், ஏனைய சர்வதேச சமூகத்திற்கும் பாரிய தார்மீகப் பொறுப்புண்டு என்றே நாம் நம்புகின்றோம்.

இது குறித்து நீங்கள் எடுக்கப்போகும் நியாயபூர்வமானதும் கடுமையானதும், தீர்க்கமானதுமான நடவடிக்கையே தமிழ் ஊடகவியலாளர்களினதும், ஒட்டுமொத்தத் தமிழ்த்தேசிய இனத்தினதும் எழுத்து, பேச்சு மற்றும் சிந்தனை சுதந்திரத்துடன் கூடிய ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் எனவும் நாம் நம்புகின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈ.பி.டி.பி கண்டனம்

கொழும்பு,ஏப்.6

'உதயன் பத்திரிகையின் ஊழியர்கள் மீதான படுகொலை என்பது ஊடக சுதந்திரத்தின் கழுத்தை நெரித்து, தமிழ் பேசும் மக்களை இருண்ட யுகத்திற்குள் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கான திட்டமிடப்பட்ட அராஜகச் செயலாகும்!

இப்படி ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி).

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைக்கான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை ஊடகச் சுதந்திரத்தின் மீதான அச்சுறுத்தலும், ஊடகவியலாளர்கள் மீதான படுகொலைகளும் முடிவற்ற கொடிய நிகழ்வுகளாகத் தொடர்ந்துவருகின்றது. அனுபவ முதிர்ச்சியும் மக்கள் மீதான நேசிப்பும் மக்களின் விடிவு மீதான பற்றுறுதியும் கொண்டு உழைத்துவந்த பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். மரண அச்சுறுத்தலினால் பலர் புலம்பெயர்ந்து போகவும் ஒதுங்கியிருக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஈ.பி.டி.பியினர் ஆகிய நாம் பல ஊடகவியலாளர்களைப் படுகொலைச் கலாசாரத்துக்குப் பலிகொடுத்திருந்த வலியுணர்ந்தவர்கள். அந்த வலி தரும் வேதனைகள் இனியும் ஓர் ஊடகவியலாளன் பலியாகி விடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வினை எம்மிடையே ஏற்படுத்தியும் இருக்கின்றது.

ஜனநாயக அரசியல் களத்தில் சரியான செய்திகள், தவறான செய்திகள், உண்மையான செய்திகள், உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்ற முரண்பாடுகளைக் கடந்து பலதும் பத்தும் என்ற நிலையில் ஊடகங்கள் இருப்பது யதார்த்த பூர்வமான நிலையாகும். சரியெது, பிழையெது, உண்மையெது, பெய்யெது என்பதைத் தீர்மானிக்கும் சக்திகள் மக்களாகவே இருக்கமுடியும். அந்தவகையில் ஈ.பி.டி.பியினராகிய நாம் தொடர்ந்து வரும் எமக்கெதிரான கருத்துகளைக் கருத்துகளால் மட்டுமே சந்தித்துவருகின்றோம்.

சொல்லவரும் கருத்துக்களை நிறுத்துமாறு துப்பாக்கிகள் தீர்ப்பெழுதும் வழிமுறை மீது நாம் ஒருபோதும் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர்.

இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையைச் சிதறடிப்பதற்கான மற்றுமொரு திட்டமாகவும் மக்களைப் பதற்றமான சூழ்நிலைக்குள் வைத்திருக்கும் புலிகளின் வழமையான சுயலாப அரசியலுக்காகவும் புலிகளின் துப்பாக்கிகள் யாழ். உதயன் ஊழியர்கள் மீது குறிவைத்துப் பலியெடுத்திருக்கின்றது.!

வழமைபோல் படுகொலைகள் புரிந்துவிட்டு அதற்கான பழியை அடுத்தவர் மீது சுமத்தும் புலிகளின் பொய்யான பரப்புரைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பது என்பது ஜனநாயகத்தை நேசிக்கும் சக்திகள் இடையே விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது!

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பேட்டியைப் பிரசுரித்திருந்த உதயன் பத்திரிகை மீது புலிகளின் ஊடகங்கள் பலவும் பாய்ச்சல் நடத்தியிருந்ததையும் இங்கு நினைவுபடுத்த விரும்பும் நாம், உதயன் ஊழியர்கள் மீதான படுகொலைக்கு காரணங்களைக் கூறமுடியாமல் அதற்கான பழியை ஈ.பி.டி.பியினர் ஆகிய எம்மீது பழியைச் சுமத்தியிருக்கின்றார்கள் என்பதையும் தெரிவிக்கவிரும்புகின்றோம்.

புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் நாம் வெளியிடும் அறிக்கைகளில் சிலவற்றையாவது வெளியிட்டு வந்த உதயன் ஊழியர்கள் எமது நன்றிக்குரியவர்கள். படுகொலைக் கலாசாரத்துக்குப் பலியாகிப்போன உதயன் ஊழியர்களுக்கு எமது - அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம். அவர்களை இழந்து நிற்கும் குடும்பங்களுக்கும் உதயன் பத்திரிகை நிறுவனத்தினருக்கும் ஆறுதல் தெரிவிக்கின்றோம்.

வெளிவராத உண்மைகளும் இல்லை. அறியப்படாத மர்மங்களும் இல்லை. உண்மைகள் நிச்சயம் வெளிப்பட்டுவரும். உதயன் ஊழியர்கள் மீதான கோரப்படுகொலைகள் குறித்து அரசாங்கம் உடன் விசாரணை நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென ஜனாதிபதியிடம் நாம் வலியுறுத்த விரும்புகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உதயன் படுகொலைகளுக்கு மாணவர் ஒன்றியம் கண்டனம்

'உதயன்' மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டித்து யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் -

'உதயன்' பணிமனையின் மீது படையினரும், ஒட்டுக்குழுவின்(ஈ.பி.டி.பி) உறுப்பினர்களும் இணைந்து நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகம் மற்றும் தாக்குதலைப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஜனநாயக உரிமை, மனித உரிமை, பத்திரிகைச் சுதந்திரத்தை மதிக்காத மேற்படி சக்திகள் மேற்கொண்ட கோரமான வன்முறைகளையிட்டு தமிழ் மக்கள் அதிர்ந்து போயிருக்கின்றார்கள்.

குடாநாட்டில் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்களை உண்மையாகவும் தெளிவாகவும் துணிந்து நின்று செய்திகளை உடனுக்குடன் உலகறியச் செய்து தமிழ் மக்களுக்கு உதயன் ஆற்றி வரும் பணி மகத்தானது.

இதனைப் பொறுக்காத ஒட்டுப்படைகள் மிகவும் மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தியுள்ளன. இதன் போது படுகொலையான எங்கள் உறவுகளுக்கு எமது அஞ்சலியைத் செலுத்துவதோடு அவர்களின குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொடர்ந்தும் 'உதயன்' தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவோடு தொடர்ந்தும் தன் பணி தொடர்வான் என்று நம்புவதோடு அதற்காக என்றும் எமது ஆதரவுக்கரம் நீண்டுகொண்டேயிருக்கும்.-

என்று உள்ளது. (ஐ)

# உதயன் மீதான தாக்குதலுக்கு மலையக மக்கள் முன்னணி கண்டனம்

சர்வதேச ஊடக மாநாடு கொழும்பில் நடைபெறும்போது தமிழர்களின் உரிமைக் குரலாக ஒலித்த 'உதயன்' பத்திரிகை மீதான தாக்குதல் இன வன்மத்தை வெளிப்படுத்துவதோடு ஊடகச் சுதந்திரம் இலங்கையில் மதிக்கப்படுவதில்லை என்பதையும், இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்களே அதிகமாகப் பழிவாங்கப்படுகிறார்கள் என்பதையும் சர்வதேச பத்திரிகையாளர்கள் புரிந்துகொள்வதற்கு இச்சம்பவம் எடுத்துக்காட்டு.

எனவே, எந்தப் பத்திரிகையாளர்கள் மீதும் மேற்கொள்ளப்படும் மிலேச்சத்தனமான தாக்குதல்களை மலையக மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

நிமலராஜன் முதல் தொடர்ச்சியாக தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டு வருவது வேதனைக் குரியது. அத்தோடு 'சுடர் ஒளி', 'உதயன்' பத்திரிகைகள் மீது பரவலாகக் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்று வந்துள்ளன. ஆனால், இவ்விடயத்தில் பாதுகாப்புத் துறையினர் இதுவரையில் எவரையும் கண்டு பிடிக்காமல் தங்களது பலவீனத்தைக் காட்டியுள்ளார்கள்.

சம்பவங்களுக்கு கவலையும், கண்டனமும் தெரிவிப்பதோடு, விடயங்கள் முடக்கப்பட்டு வருகின்றன. எந்த ஒரு விசாரணையும் பூரணமாக நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது அடையாளம் காணப்பட்டதாக இல்லை. மனித உரிமை மீறல்களுக்கும், கொலைக் கலாசாரத்திற்கும் பெயர் பெற்ற பௌத்த நாடாக இலங்கை மாறி வருவது சர்வதேச ரீதியில் இலங்கை மீது அவநம்பிக்கையையே ஏற்படுத்தி வருகிறது.

(த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சவால்களை சமாளித்து தலைநிமிர்ந்து நிற்பான்

## உதயன் தாக்குதல் குறித்து சைவக் குருமார் சம்மேளனம்

யாழ்ப்பாணம்,மே6

எதிர்காலத்திலும் வரும் சவால்களையும் சமாளித்து உறுதியோடு உதயன் தலைநிமிர்ந்து நிற்பான் என்பது திண்ணம் என்று அகில உலக சைவக்குருமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

உதயன் மீதான தாக்குதலைக் கண்டித்து அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஊடகத்துறையை ஊடறுத்தவர்கள் நீதிக்கு முன் தப்பினாலும் ஆண்டவனிடம் தப்ப இயலாது.

02.05.2006 இரவு 7.45 மணியளவில் உதயன் நிறு வனத்தின் இரு ஊழியர்கள் அழிக்கப்பட்டும், ஏனையவர் காயத்திற்குள்ளாகியும் நிறுவனம் சேதப்படுத்தப்பட்ட விடயம் நான் கொழும்பில் தொலைக்காட்சி செய்தி மூலம் அறிந்து ஆழந்தக் கவலையும் அதிர்ச்சியும் அடைந்தேன்.

கடந்த 4ஆம் திகதி ஊர்திரும்பியதும் நான் கேட்ட முதல் கேள்வி உதயன் இன்று வெளி வந்ததா? கடந்த இரண்டு தசாப்தகால -இருபது ஆண்டு கால வரலாற்றில் எத்தனையோ தாக்குதல் துன்பங்களைச் சந்தித்த உதயன் எதிர்காலத்திலும் வரும் எத்தகைய சவால்களையும் சமாளித்து சவாலே சமாளி என்று உறுதியோடு தலை நிமிர்ந்து நிற்பான் என்பது திண்ணம்.

எனவே மேற்படி சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத் தினருக்கும், உதயன் நிறுவனத்திற்கும் எனது சார்பிலும் எமது அமைப்பின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய அன்னையைப் பிரார்த்தித்து அமைகின்றேன்

- என உள்ளது.

## மனைப்பொருளியல் பயிற்சி நிறைவு

தென்மராட்சி,மே6

யாழ். மாவட்ட ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தினரால் சாவகச்சேரியில் படித்த யுவதிகளுக்கு நடத்தப்பட்ட மனைப்பொருளியல் பயிற்சி நெறியின் நிறைவு நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி புனித விகோரியார் தேவாலயத்தில் இடம்பெற்றது.

யுவதிகளால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சியும், பயிற்சியை முடித்த யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

இதற்கு முதன்மை விருந்தினராக நிறுவன தேசிய இயக்குநர் வணபிதா அருட்திரு. வின்னியோசப் அடிகளும் சிறப்பு விருந்தினராக நிறுவன யாழ். மாவட்ட இணைப்பாளர் அருட் திரு. எஸ். ஸ்ரனிஸ் ...பாஸ் அடிகளும், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி பங்குத் தந்தை அருட் திரு. இரவிச்சந்திரன் அடிகளும் கலந்துகொண்டனர்.

(117)

## தந்தை செல்வா நினைவு நிகழ்வு

கொழும்பு,மே6

தந்தை செல்வாவின் 108 ஆவது நினைவு நாளை முன்னிட்டு நாளை மாலை 5.30 மணிக்கு வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை கண்ணதாசன் மன்றத் தலைவர் வேலணை வேணியன் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு ஆ.சிவநேசச் செல்வன் தலைமை வகிப்பார்.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே6

இன்றும், நாளையும் நடைபெறவிருந்த சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி தவிர்க்க முடியாத காரணங்களினால், பிற்போடப்பட்டுள்ளது என்று உதவிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே6

யாழ்.கல்வித் திணைக்களத்தில் இன்று நடைபெறவிருந்த பேரவைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

* * *

யாழ்ப்பாணம்,மே6

தீவகவலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவிருந்த பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


ஜயோதர

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7523893 முதல் 7533139 வரை. சீட்டிழுப்பு இல. 233 திகதி 04-05-2006

வெற்றி எண்கள்

0 7 2 2 1 9 சுப்பர் எண் 07

ஜக்பொட் பரிசு ரு. 13,216,550/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 13,216,550/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 0 | 1,000,000/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 77 | 5,000/= | 385,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 797 | 500/= | 398,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 7922 | 50/= | 396,100/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 78532 | 10/= | 785,320/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 81 | 1,000/= | 81,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 793 | 100/= | 79,300/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 7854 | 20/= | 157,080/= |
| | | மொத்தம் ரு. 2,777,300/= | |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 3,379,900/-

ரு. 75,325/- பெறுமதியான ஒரு மோட்டார் சைக்கிளை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவ | 7525287-5-62 |
| கண்டி | 7527892-8-10 |
| மொணராகலை | 7531421-3-49 |
| அம்பாறை | 7528790-1-16 |
| திருகோணமலை | 7524261-1-65 |
| காலி | 7523932-6-13 |
| கம்பஹா | 7529843-8-67 |
| கேகாலை | 7530512-5-90 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரு. 13,436,900/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## மூளாய் விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம்,மே6

மூளாய் - வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து திருவிழா 13 தினங்கள் நடை பெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழன் தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடை பெறும். தினமும் மாலை 7 மணிமுதல் 8 மணி வரை தெய்வீக இசை அரங்கும் இடம்பெறும்.

(ஐ)

## ஆனைக்கோட்டையில் வேகத்தடையால் பொதுமக்கள் சிரமம்

வலி.தென்மேற்கு, மே.06

ஆனைக்கோட்டை இராணுவமுகாமுக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் வீதிக்கு குறுக்காக கற்களாலும், தாரினாலும் வேகத்தடை அணை நிறுவப்பட்டுள்ளது.

இதனால், மேற்படி பிரதான வீதியூடாக சிறிய ரக வாகனங்களிலும் சிறியரக மோட்டார் சைக்கிள்களிலும் பயணம் செய்யும் பொது மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(135)

## சங்கானை வீதிகளில் வாகனம் நிறுத்துவதற்கு படையினர் தடை

சங்கானை, மே.06

சங்கானை - காரைநகர் பிரதான வீதியில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் நிறுத்துவதற்கு பாதுகாப்புப் படையினர் நேற்றுமுன்தினம் முதல் தடைவிதித்துள்ளனர்.

இதனால், மேற்படி வீதியில் உள்ள கடைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது வாகனங்களை எங்கே நிறுத்திவைப்பது என அறியமுடியாமல் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர்.

(29)


ACA

கோயில் வாசல், கே.கே.எஸ். வீதி இணுவில்

பௌதிகவியல் A/L 2007

மின்னியல்

TUE, THU:- 6.15 a.m.

திரு.குமரன் (B.Sc.)

ஆரம்பம் 09.05.2006 (TUE) :- 6.15 a.m.

A/L 2008 கலை, வர்த்தக, கணித, உயிரியல் வகுப்புகள் நடைபெறுகின்றன

(30019)


## சிறந்த எரிபொருள் நிலையமாக சண்டிலிப்பாய் உதயன் தெரிவு

யாழ்ப்பாணம்,மே6

அகில இலங்கை ரீதியில் சிறந்த எரிபொருள் விநியோக நிலையங்களில் ஒன்றாக சண்டிலிப்பாய் உதயன் எரிபொருள் விநியோக நிலையம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சிறந்த எரிபொருள் நிரப்பு நிலையம் 2005 விருதுக்காக அகில இலங்கையில் 10 நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டன. இவற்றில் யாழ். மாவட்டத்தில் மேற்படி எரிபொருள் விநியோக நிலையம் தெரிவுசெய்யப்பட்டது.

வாடிக்கையாளர் கவனிப்பு, சிறந்த சுற்றாடல், அதிகளவில் களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு அகில இலங்கையில் 10 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விருது வழங்கப்பட்டது. இலங்கை போக்குவரத்து அமைச்சு இதற்கென ஒரு குழுவினை நியமித்து தெரிவுகளை மேற்கொண்டது.

இதற்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் 26ஆம் திகதி பத்தரமுல்லையில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றது.

இதில் இலங்கை போக்குவரத்து அமைச்சர் எச்.எம்.பௌசி முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு விருதை வழங்கினார்.

(13)

## கந்தர் மடம் பகுதியில் படையினர் சோதனை

வலி.வடக்கு,மே6

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கையில் இராணுவத்தினர் நேற்றுக் காலை முதல் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து இந்தச் சோதனையில் ஈடுபட்டனர்.

ஆத்தி சூடி வீதி, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, அரசடி வீதி ஆகியவற்றின் ஊடாக வந்த அனைத்து வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

உடற்சோதனைகளும் நடத்தப்பட்டது.

(ஐ-86)

## உடுவில் பிரதேச தடகளப் போட்டி

யாழ்ப்பாணம்,மே6

உடுவில் பிரதேச செயலக பிரிவிற்கு உட் பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடை யிலான தடகளப் போட்டி இன்றும், நாளையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்கிறார்.

(3-190)

## மரண அறிவித்தல்

### மடுத்தீன் ஜோன்பிள்ளை

கூழாவடி மேற்கு, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தீன் ஜோன்பிள்ளை கடந்த 30.04.2006 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மடுத்தீன் - மதலேனம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மேரி றோசின் அன்புக் கணவரும் மேரி ஜோசேப்பின் அருளானந்தம், திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மேரி ஜசிந்தா (கலா- லண்டன்), ஜோன் கெனடி (ஜோன்சன்- பிரான்ஸ்), றொபேட் கெனடி (றொபேட் - ஜெமைக்கா), மேரி அன்ரனீற்றா (நீலா- கனடா), மேரி யூக்கலிஸ்ரா (உயிலா -லண்டன்) காலஞ்சென்ற எட்வேட் கெனடி ஆகியோரின் அன்புத் தந்தையும் அல்போன்ஸ் ஜெயக்குமார் (லண்டன்), ஆனந்தகுமாரி (ஜெயா- நீர்கொழும்பு), றொபேட் வின்சன் (கனடா), யூட் யூனிஸ் (லண் டன்), ஜெரின் வைலற் (வந்தாயினி- குருநகர்) ஆகியோரின் அன்பு மாமனும் வினோசாந், தர்சிகா, அன்ரனி அஸ்வின், சங்கீதா, தயாழினி, கிஷோன், திஷானி, டியூலின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனைகள் இன்று (06.05.2006) சனிக்கிழமை கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரன்
ம.அருளானந்தம்(ராசா)
குடும்பத்தினர்.

கூழாவடி மேற்கு,
ஆனைக்கோட்டை.

(49980)

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
20 - 09 - 1920



மறைவு
07 - 04 - 2006

### அமரர் வேலுப்பிள்ளை சிவசாமி

கடந்த 07.04.2006 அன்று சிவபதமடைந்த அமரர் வேலுப்பிள்ளை சிவசாமி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (07.05.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற அன்று கண்ணீர் அஞ்சலி செலுத்தியும் பல வழிகளிலும் உதவிகள் ஆற்றிய பாடசாலைச் சமூகம், அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைப் பகிர்கின்றோம்.

- குடும்பத்தினர்.

*தற்காலிக முகவரி:*
1043, கே.கே.எஸ்.றோட்,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

*நிரந்தர முகவரி:*
வீரமாணிக்கம்தேவந்துர
மயிலிட்டித்துறை. (50033)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய நிலை குறித்து நாடாளுமன்றில் தீர்க்கமான முடிவை அரசு எடுக்கவேண்டும்!

## ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, மே 05

நாட்டில் அதிகரித்துவரும் வன்முறைகள் குறித்து அரசு நாடாளுமன்றத்தைக் கூட்டி ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய தெரிவித்திருக்கிறார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் தற்போது ஊடகங்கள் மற்றும் மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி பொறுப்புள்ள கட்சி என்ற ரீதியில் மக்களின் நலனைக்கருத்திற்கொண்டு மக்களை பாதுகாக்கும் நோக்கில் செயற்பட்டுள்ளது; செயற்பட்டும் வருகின்றது.

ஆகவே, அரசு இவ்வன்முறைச் சம்பவங்களை ஒழிப்பதற்காக உரிய நடவடிக்கையினை கூடிய விரைவில் எடுக்கவேண்டும். வன்முறைச் சம்பவங்களை ஒழிப்பதற்காக அரசு எந்தவித கவனமும் எடுக்கவில்லையென நாங்கள் ஆர்ப்பாட்டம் எதுவும் மேற்கொள்ளவில்லை. வாகனங்கள், கடைகளை எரிக்கவும் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி மக்களுக்கு எந்தவிதத்திலும் இடையூறுகள் ஏற்படுத்த எண்ணாது.

நாட்டில் எண்ணெய்வளம் இருப்பதாக நாம் அன்றே தெரிவித்திருந்தோம். ஆனால், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்களே தவிர ஆதரவு வழங்க யாரும் முன்வரவில்லை. தற்போது எண்ணெய் வளம் கண்டுபிடித்திருப்பதாகப் பெருமையடித்துக்கொள்கிறார்கள்.

வடக்கு - கிழக்கில் தொடர்ந்தும் ஏற்பட்டுவரும் வன்முறைச் சம்பவங்களினால் பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். இவர்களுக்கான அனைத்து நிவாரணங்களும் வழங்கப்பட்டு மீண்டும் அவர்களுடைய சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு அரசு கூடிய கவனமெடுக்கவேண்டும்.

அத்துடன், நாட்டில் நிலையானதொருசமாதானத்தை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (த-03)

# 3 ஆவது பயிற்சியாட்டத்தில் இலங்கை 179 ஓட்டங்களுக்குள் சுருண்டது

இங்கிலாந்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கையணி, அங்குள்ள காலநிலைக்கேற்பத் தன்னைத் தயார் செய்வதற்காக பயிற்சியாட்டங்களில் பங்குபற்றி வருகின்றது. முதல் பயிற்சியாட்டம் சமநிலையில் முடிய 2ஆவது பயிற்சியாட்டத்தில் இலங்கையணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. தொடர்ந்து மூன்றாவது பயிற்சியாட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

இங்கிலாந்து 'ஏ' அணியுடனான இப்பயிற்சியாட்டம் நான்கு நாள்கள் நடைபெறுகின்றது. இவ்வாட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கையணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்பவீரர்களாக மைக்கல் வெண்டோட் மற்றும் உபுல் தரங்க ஆகியோர் களமிறங்கினர். முதல் பந்திலேயே வெண்டோட் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார். அவர் லூலிஸின் பந்து வீச்சில் லோவ்டொன் என்பவரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அணி 9 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை மற்றைய ஆரம்ப வீரரான தரங்க ஓட்டமெதுவும் பெறாத நிலையில் லூவிஸின் பந்தில் விக்கெட் காப்பாளர் ரீட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த சங்ககார மற்றும் ஜெயவர்த்தன ஆகியோரும் லூவிஸின் பந்தில் விக்கெட் காப்பாளரிடம் பிடிகொடுத்து வெளியேறினர். அடுத்து வந்த சமரவீர ஓட்டமெதுவும் பெறாதநிலையில் ஆட்டமிழந்த போது அணி 44 ஓட்டங்களிற்கு 5 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

6 விக்கெட்டில் ஜோடி சேர்ந்த டில்சான் மற்றும் கப்புக்கெதர ஆகியோர் தம்மிடையே 76 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைச் சரிவிலிருந்து மீட்டனர். இந்நிலையில் கப்புக்கெதர 36 ஓட்டங்களுடன் லூவிஸின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். அவர் ஆட்டமிழந்த பின்பு அணி மேலதிகமாக 19 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் டில்சான் 47 ஓட்டங்களுடன் லூவிஸின் பந்தில் 'போல்ட்' ஆனார். டில்சானே இலங்கை அணி சார்பாக கூடிய ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

அடுத்து வந்த மஹ்ரூப்(19), சமிந்தவாஸ்(16), மலிங்க(0) ஆகியோர் புளுங்கெற்றின் பந்தில் ஆட்டமிழக்க இலங்கையணி 179 ஓட்டங்களிற்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பந்து வீச்சில் லூவிஸ் 49 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதன் பின்னர் தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து 'ஏ' அணியும் ஓட்டமெது வும் பெறாதநிலையில் ஆரம்ப வீரரான அலஸ்ரியர் குக் என்பவரை இழந்தது. அவர் வாஸின் பந்து வீச்சில் ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதன் பின்னர் சுதாகரித்து ஆடிய றொபேட் கீ மற்றும் ஒயிஸ் ஷா ஆகியோர் அணியை ஸ்திரமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இந்நிலையில் ஒயிஸ் ஷா 18 ஓட்டங்களுடன் குலசேகரவின் பந்தில் சமர வீரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ஆட்டநேரம் முடியும் போது றொபேட் கீ 46 ஓட்டங்களுடனும் ஜோய்ஸ் 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

# சிறைச்சாலைகள் ஆணையாளர் நியமனம்

கொழும்பு, மே 05

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரூமி மர்சூக் பதவியில் இருந்து ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து அவரது இடத்திற்குப் புதிய சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் வஜிரநிசங்க விஜயகுமார நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவிக்கு இவரை நியமிக்குமாறு கோரி அமைச்சர் அமரசிறி தொடங்கொட அமைச்சரவையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தை ஏற்றுக்கொண்டதன் பின்பே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன் பிரகாரம் இம்மாதம் இரண்டாம் திகதி முதல் இந்நியமனம் நடைமுறைக்கு வந்துள்ளது என ஊடகத்துறை அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா நேற்றுக் கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தெரிவித்தார். (க)

# விசாரணைக்குழு நியமனம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இரு பீடங்களின் மாணவர்கள் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் குறித்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க உபவேந்தர் ஏழு பேர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார்.

கடந்த 2ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அறுவர் காயங்களுக்கு உள்ளானார்கள். ஐவர் பேராதனை போதனா வைத்தியசாலையிலும் ஒருவர் கண்டி போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒழுக்காற்று நடவடிக்கை விசாரணைக் குழுவில் சிரேஷ்ட விரிவுரையாளர்களும் இடம்பெற்றுள்ளனர். (க-203)

# மரண அறிவித்தல்கள்

## இராசையா நாகராஜா

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்,
யாழ். போதனா வைத்தியசாலை)



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் தற்பொழுது கனடாவில் வசித்தவருமாகிய இராசையா நாக ராசா அவர்கள் 02.05.2006 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - இராசம்மாவின் அன்புப் புதல்வரும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் மதியழகன் (கனடா), மணிவண்ணன் (சுவிஸ்), மணிமாறன் (மாறன் தொலைத் தொடர்பகம், உடுவில்), மதிவதனன் (கனடா), மதிறஜனி, மலர்விழி (கனடா), சிறிபவன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் தவமணி, கனகமணி, குலசேகரம், பாசமலர், தேவராஜா (U.K.), வசந்தமலர் (ஆசிரியை) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (06.05.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய். (50036)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## திருமதி ஆறுமுகம் இராசமணி

புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, உடையார் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற ஐயம்பிள்ளை ஆறுமுகத்தின் அன்பு மனைவி இராசமணி அவர்கள் 01.05.2006 காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.05.2006 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று அன்று மாலை கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (49982)

தகவல்:
சூரியகலா
(மகள்).

## பண்டாரம் கந்தையா

(மாவிட்டபுரம்)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவரும் தற்போது நீர்வேலி வடக்கு, கதிர்காமர் கோயிலடியில் வசித்து வந்தவருமான பண்டாரம் கந்தையா அவர்கள் 03.05.2006 அன்று புதன்கிழமை இரவு 8 மணியளவில் காலமானார்.

அன்னார் பண்டாரம் - பூதாத்தை தம்பதியரின் அன்பு மகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவலிங்கம், நவரத்தினம், இரத்தினம் (சங்கரத்தை), ரவீந்திரராணி (ரவி - கோண்டாவில்), விமலராணி (விமலா - புத்தூர்), ஜெயரத்தினம் (ராசன்-ஜேர்மனி), விஜயராணி (மட்டுவில்), வசந்தமாலா (மாலா -ஜேர்மனி) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், யோகமலர் (சங்கரத்தை), சண்முகராஜா (கோண்டாவில்), பாலசுப்பிரமணியம், புனிதவதி (ஜேர்மனி), நாகேந்திரம் (டோகா), சிவகுமார் (சிவம் - ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் மஞ்சுளா, தமிழேசன், காஞ்சனா, குகதாசன், சசிகலா, தேவராஜா, கண்ணன், கமல், சர்மிளா, தயாபரன் (கனடா), வாசுகி, சுஜித்தா, விஜித்தா, ரஜித்தா (தீபன்), ரஜீப், சஞ்சீவி, தர்சிகா, சிந்துஜா, தனுஜா, றாஜீவ், தர்சிகா, கவஜினா, பிரதீபா, திலக்சன், அஜானா, கஜன், அஜந், அஜனா ஆகியோரின் அன்புப் பேரனும் கிருசாளியின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்ற மாரிமுத்து (மலேசியா), சிதம்பரப்பிள்ளை (மாவிட்டபுரம்), காலஞ்சென்ற நடேசு, தம்பையா, மாணிக்கம் (மாவிட்டபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.05.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:*
கதிர்காமர் கோயிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

*நிரந்தர முகவரி:*
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
(50041)

தகவல்,
க.நவரத்தினம்
(இரத்தினம்-மகன்)
தொ.பே.: 0777 459468.

## பாராட்டுகின்றோம்



ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகச் சேவையாற்றி இன்று (06.05.2006) சனிக்கிழமை ஓய்வுபெறும் எமது அதிபர்

**திருமதி க.கணேசமூர்த்தி**

அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவர் நீடுழி காலம் வாழ வாழ்த்து கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/திருநெல்வேலி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை.
(50039)

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

**பழைய மாணவர் சங்கம்**
**ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2006**

23.04.2006 இல் நடைபெறவிருந்த பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. மேற்படி கூட்டம் எதிர்வரும் 07.05.2006 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செயலாளர்,
க.கனகரத்தினம்.
(50038)




Beauty Care
* Hair Care
* Body Care
&
* Fashionable Bridal Dressing ect...

No - 174, Kannathiddy Rd,
Jaffna.
Tel - 021-222-6018

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் றிட்சஸ்சனின்
கிங் - கொங் King Kong
தங்கத் தமிழ் மொழியில்
[பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை]
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
அழகாய் இருக்கிறாய்
பயமாய் இருக்கிறது
10.30, 2.30, 6.30, 9.30 முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாகம்ஸ் சுன்னாகம்
எஸ்.ஜே.சூரியா, நயன்தாரா மற்றும் பலர் நடித்த
கள்வனின் காதலி
காட்சி நேரம்: 10.30, 2.30, 5.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓட்டுமடத்தில் சடலம்?

யாழ்ப்பாணம்,மே6

ஓட்டுமடம் பகுதியில் நேற்றிரவு ஒன்பது மணியளவில் வேட்டுச் சத்தங்கள் கேட்டன. அதன் பின்னர் அப்பகுதியில் வீதியில் சடலம் ஒன்று காணப்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது. அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

வாகனங்களின் நடமாட்டமும் அவ்விடத்தில் காணப்பட்டதாக அப்பகுதி வாசிகள் சிலர் தெரிவித்தனர். (ஐ)

## தம்பாட்டியில் கைதானவர்கள் 8 பேர் தொடர்ந்தும் விசாரணையில்

யாழ்ப்பாணம்,மே6

ஊர்காவற்றுறை தம்பாட்டிப் பகுதியில் நேற்று நடைபெற்ற தேடுதலின்போது கைது செய்யப்பட்டவர்களில் 8பேர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

நேற்றைய சுற்றிவளைப்புத் தேடுதலில் 35 பேர் விசாரணைகளுக்கென தம்பாட்டிக் கடற்கரையோரமாகத் தடுத்துவைக்கப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். பின்னர் ஏனையோர் விடுவிக்கப்பட 8 பேர் மட்டும் படையினரால் அழைத்துச்செல்லப் பட்டுள்ளனர். (முன்னர் வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்) (16)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தை அடுத்து பொலீஸாரும், இராணுவத்தினரும் இணைந்து சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர்.

சம்பவத்தின் பின்னர் ஆத்திரமுற்ற படையினர் வீதியில் சென்று வந்த பொதுமக்களைத் தாக்கினர் என்றும் கூறப்பட்டது. படுகாயமடைந்த பொதுமக்கள் இருவரும் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ம-க)

## உதயன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடங்குகள் இன்று நடைபெறுகின்றன.

இறுதி அஞ்சலி நிகழ்வுகளின்பின்னர் அன்னாரின் பூதவுடல் இன்று பி.ப. 2.45 மணிக்கு சிவகுருநாதர் வீதியில் அவர் வசித்த இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, யாழ். புனித அடைக்கலமாதா தேவாலயத்தில் வைக்கப்படும். அங்கு திருப் பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, ஆசனக்கோயில் சேமக் காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

திருகோணமலைச் சொந்த இடமாகக் கொண்டவர் சுரேஷ். அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். (ஐ)

## இன்று கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி எதிர்வரும் 10ஆம் திகதி வரை கொழும்பில் தங்கியிருப்பார். அப்போது அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா மற்றும் அமைதி முயற்சிகளுக்கான அரச உயரதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாட உள்ளார்.

அவரது இந்த விஜயத்தின் போது வன்னி சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசுவதற்கான சந்தர்ப்பங்களையும் அவர் ஆராய்வார்.

- என்று கூறப்பட்டுள்ளது.

இதேவேளை,

விசேட தூதர் யசூசி அகாஷி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 9ஆம் திகதி தேசியத் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க விருப்பம் தெரிவித்து யசூசி அகாஷி புலிகளுக்கு தகவல் அனுப்பியிருந்தார் என்றும் அவர் குறிப்பிட்ட தினத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதே வசதியாக இருக்கும் என்றும் புலிகள் தரப்பிலிருந்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (ம-க)

## குதிரைமலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகு ஒன்று சிறு சேதங்களுக்குள்ளானது என்றும் அவர் கூறினார். அரச தரப்பின் இந்தத் தகவலைப் புலிகள் ஊர்ஜிதப்படுத்தவில்லை.

இதேவேளை, குதிரைமலைக் கடலில் புலிகளின் இரு படகுகளின் நடமாட்டத்தைப் படையினர் அவதானித்தனர் என்றும் -

அப்படகுகளை நோக்கி கடற்படையினர் முன்னேறிச் சென்றபோது படகுகளில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் -

கடற்படையினரின் பதில் தாக்குதலில் ஒரு படகு வெடித்துச் சிதறியது என்றும் - படைவட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வெடித்துச் சிதறிய அந்தப் படகு புலிகளின் தற்கொலைப்படகு என்று கடற்படையினர் தெரிவித்தனர் என்றும் அந்த ஏஜென்சி கூறியது.

புலிகளின் படகுகள் இரண்டு மீதும் கடற்படையினர் தாக்குதலை மேற்கொண்டதை அடுத்து கரையில் இருந்து வேறு இரு படகுகள் உதவிக்கு விரைந்தன. எனினும் ஒரு படகு தாக்குதலில் பற்றி எரிந்ததை அடுத்து ஏனைய படகுகள் கரைக்குத் திரும்பிச் சென்றுவிட்டன என்றும் அந்த ஏஜென்ஸித் தகவல் மேலும் தெரிவித்தது. (ஐ-ம-க)

## அக்கரைப்பற்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கோவில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சடலத்திற்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் காணப்பட்டதாகக் கூறும் பொலீஸார்,அதில் பயணித்துக் கொண்டிருக்கும் சமயத்திலேயே இளைஞர் சுட்டுக்கொல்லப் பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்றுப் பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (க)

## தாக்குதல்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களப் படைகள் கிழக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை என தமிழின அழிப்பினை மேற்கொண்டது போல குடாநாட்டிலும் தமது அராஜகத்தினைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன.

தமிழ் மக்களின் மீதான தாக்குதல்களை மூடிமறைப்பதற்கு ஊடகவியலாளர்கள் மீதும், ஊடகங்கள் மீதும் தாக்குதல் நடத்தத் தொடங்கிவிட்டார்கள்.

புத்தூரில் ஐந்து தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்ததுபோல் பட்டப்பகலில் வடமராட்சி, நவிண்டில் பகுதியில் வைத்து இராசகிராமத்தைச்சேர்ந்த அப்பாவி இளைஞர்கள் ஏழு பேரைப் படுகொலை செய்துள்ளனர்.

குடாநாட்டில் தோன்றியுள்ள இந்தப் பயங்கர சூழல் காரணமாக பொது அமைப்புகள் ஒன்றுகூடி குடாநாடு தழுவிய அரச எதிர்ப்பு பணிப் புறக்கணிப்புப் போராட்டத்திற்கு அழைப்புவிடுத்துள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவ நிலைகள், முகாம்களுக்கு பக்கத்தில் இருக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறும், மக்கள் கண்டபடி வீதிகளில் நடமாடுவதை நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நாம் எமது தாக்குதல்களை இந்தக் காலப் பகுதிகளில் தீவிரப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். எனவே, பொது அமைப்புகளின் கோரிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கி எமது தாயகப் பிரதேசத்திலிருந்து எதிரிகளைத் துரத்த - எம்மண்ணையும் எமது மக்களையும் மீட்க - பக்கபலமாக இருக்குமாறு மக்கள் படையாகிய நாங்கள் அன்பாக எமது உறவுகளிடம் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


FINAL SEMINAR

CHEMISTRY

- Basic முதல் கைத்தொழில் இரசாயனம் வரை முக்கிய பகுதிகளின் மீட்டல்.
- எதிர்பார்ப்பு வினாக்கள்.
- பாடக்குறிப்புகள்
- MODEL Paper கலந்துரையாடல்.
- குறைந்தது 7 நாள்கள் நடைபெறும்

இடம்: NEW SCIENCE CENTRE
ஆரம்பம்: 08.05.2006 திங்கட்கிழமை 9-2

கட்டணம் 400/-

By: அன்பழகன் B.Sc.


## தாக்குதலாளிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டில் அண்மையில் இடம்பெற்ற வேறு தாக்குதல் சம்பவங்களில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி ரவைகளுக்கும் இந்தத் துப்பாக்கிக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்பது உட்பட எல்லா தடையங்களையும் பகுப்பாய்விற்கு உட்படுத்துமாறு 'உதயன்' சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் விசேட குற்றப்புலனாய்வுப் பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டிருக்கின்றார். (ஐ-3)

## நாட்டின் பாதுகாப்பை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னணியிலேயே புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளது.

நாட்டின் பாதுகாப்பிற்கான முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ள இவ்வாறன சட்டங்கள் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தற்போது நடைமுறையில் உள்ளன. இதில் அமெரிக்க மாதிரியிலான சட்டம் ஒன்றையே இலங்கையிலும் கொண்டுவருவதற்கு முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் சட்டமூலத்தைத் தயாரிக்கும் நடவடிக்கைகளில் சட்டவாக்கத் திணைக்களத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரிகளும், சிரேஷ்ட சட்டத்தரணிகள் சிலரும் தற்போது ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

சட்டவாக்கத் திணைக்களத்தின் பூர்வாங்க நடவடிக்கைகள் அனைத்தும் முடிவடைந்ததும் சட்டமூலம் தொடர்பான பத்திரமொன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். அமைச்சரவையின் அனுமதி கிடைத்த பின்னர் நாடாளுமன்றத்தில் சட்டமூலமாக அது சமர்ப்பிக்கப்படும். அங்கு பெரும்பான்மை வாக்குகளால் அது அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் அது சட்டமாக்கப்படும்.

இந்தச் சட்டத்தின்படி நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் ஒரு விடயத்தை ஒருவர் அறிந்திருந்தும் அதனைக் கூற அவர் தவறியிருப்பாராயின் அது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும். அதே போன்று நாட்டின் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கும் வகையிலான செய்தி ஒன்று ஊடகங்களில் வெளியிடப்படுமாயின் அதற்குரிய மூலங்களை ஊடகங்கள் கட்டாயம் தெரியப்படுத்த வேண்டும்.

மிக விரைவில் இந்தச் சட்டமூலத்தை ஊடகத்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-க)


ரேடியன்ற்

A/L2008 அரியாலை பிரிவு II

கலை, வர்த்தகம்

ஆரம்பம்: 07.05.2006 p.m.4மணி (ஞாயிறு)

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | கஜீதரன் |
| கணக்கீடு | - | கஜன் |
| வணிகக்கல்வி | - | செந்தூரன் |
| தமிழ் | - | மீரா |

மாபெரும் கருத்தரங்கு

வணிகக் கல்வி

இம்மாதம் 7ஆம் திகதி ஞாயிறு 1 மணிக்கு
8ஆம் திகதி திங்கள் 8 மணிக்கு

- பல்வேறு விதமான முக்கிய குறிப்புகளும்,
- நடைமுறை தகவல்களும் வழங்கப்படும்.
- கொழும்பில் இடம்பெற்ற மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் வழங்கப்படும்.

ஆசிரியர்: N.Umakanth


## மரண அறிவித்தல்

### பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்)

*(சந்தைப்படுத்தல் முகாமையாளர், உதயன் பத்திரிகை நிறுவனம்)*



திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்) அவர்கள் 02.05.2006 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஸ்ரியன் (Rtd. British Police) - திரேசா (செல்வமணி) தம்பதியரின் அன்பு மகனும் திரு. திருமதி தவராஜா - சந்திரா தம்பதியரின் அன்பு மருமகனும் சுவேந்தினியின் அன்புக் கணவனும் அல்றின், ஷேஷ்ஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி இருதயமேரி தர்மதாஸ், காலஞ்சென்ற திருமதி அக்னஸ்றீற்றா இருதயராஜா மற்றும் திருமதி புஸ்பமேரி மைக்கல் அன்ரனி, பஸ்ரியன் ஜோர்ஜ் அமலதாஸ், பஸ்ரியன் ஜோர்ஜ் அன்ரனிதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.05.2006) சனிக்கிழமை பி.ப. 2.45 மணிக்கு 12, சிவகுருநாதர் லேன், நீராவியடி, யாழ்ப்பாண இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, யாழ். புனித அடைக்கலமாதா ஆலயத்தில் (O.L.R.) திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, யாழ். ஆசனக்கோயில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்:

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.,12, சிவகுருநாதர் லேன்,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
சுவேந்தினி (மனைவி)

## மோப்பநாய்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலீஸார் கூறினர்.

ஏற்கனவே பாதுகாப்புக் காரணங்களுக்காக திருமலை நகருக்குள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்கள் வருவதற்குப் பாதுகாப்புப் படையினர் தடை விதித்துள்ளனர். (ம-க)


புனர்வோர்சல்

(யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்)

புவியியல் கருத்தரங்கு

7.5.2006 - உலகப்படம் குறித்தல்
8.5.2006 - சூழற் புவியியல்
9.5.2006 - மானிடப்புவியியல்

By: N.UTH


## மரண அறிவித்தல்

### நீலயினார் சிதம்பரப்பிள்ளை

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நீலயினார் சேதுப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனுமாகிய நீலயினார் சிதம்பரப்பிள்ளை நேற்று (05.05.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை மகேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி நிர்மலா கேத்திரபாலன் (ஜேர்மனி), திருமதி ஜெயந்தி குகநேசன் (ஜேர்மனி), திருமதி தபோஆனந்தி கனகரத்தினம் (ஆசிரியை, யா/கொடிகாமம் அரசினர் தமிழ் வித்தியாலயம்), திருமதி யசோதா றுகுணகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கேத்திரபாலன், குகநேசன், கனகரத்தினம், றுகுணகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் சங்கீதா, அனுந்திகா, கௌசிகா, சோபிகா, கீர்த்தனா, அக்ஷியா, மயூரன், ஆதீத் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான குஞ்சுப்பிள்ளை, சின்னையா (முன்னாள் கச்சாய் தபாலதிபர்), திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா (கனடா) ஆகியோரின் சகோதரரும் ஆவார். திருமதி யோகம்மா தம்பையாவின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2006) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு இந்துமயானத்திற்கு பி.ப. ஒருமணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெள்ளாம்போக்கட்டி,*
*கொடிகாமம்.*

(50044)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org